விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 02 திங்கட்கிழமை (16.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# பொறுமையுடன் காத்திருப்போம்



## இந்தியாவின் விருப்பம்போல என்கிறார் விக்னேஸ்வரன்

(கொழும்பு)

இலங்கையில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் எமக்கான உரிமை மற்றும் போர்க்குற்ற விசாரணை விடயங்களில் நாம் சில காலம் பொறுமையுடன் நடந்து கொள்ளவேண்டும். இதையே இந்தியாவும் விரும்புகிறது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சூசகமாக தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு



### தேசிய பாதுகாப்பு சபையிடம் விடுத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையை தமக்கு விரைவில் சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்புச் சபைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்பு விடுத்திருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமாரி அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் வழக்குத் தாக்கல் இன்றி 182 முதல் 189 பேர் வரையானோர் தடுத்து வைக்கப்பட் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா. அறிக்கையின் பின்பே உள்நாட்டு விசாரணை அறிக்கை?

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே இலங்கையின் உள்நாட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றம் தொடர்பிலான உள்நாட்டு விசாரணை ஒரு மாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என வெளியான தகவல்கள் குறித்து இந்திய ஊடகம் ஒன்று வினவிய போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட பின்னர், அதில் குற்றம் சுமத்தப்படும் நபர்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## 'நோ பயர் சோன்' அனுமதி மறுப்பு



(கொழும்பு)

நோ [illegible] சோனின் சிங்கள மா[illegible]பு ஆவணப்படத்தை இ[illegible] [illegible]3ஆம் பக்கம் பார்க்க....

## [illegible]துத் தேர்தலில் மகிந்த போட்டி !


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிற் கட்சியில் போட்டியிடக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இலங்கை தொழிற்கட்சியின் தலைவராக ஏ.எஸ்.பி.லியனகே திகழ்கின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த 23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களுக்கு எதிராக நாங்கள் ஒரு போதும் செயற்படமாட்டோம்

### அத்துரலியே ரத்ன தேரர் யாழில் உரை



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நாங்கள் ஒரு போதும் எதிரானவர்கள் அல்லர். பயங்கரவாதமானது எம் இரு சமூதாயத்தினரையும் அழிவை நோக்கி இட்டுச் சென்றதாலேயே அதனை தோல்வியடையச் செய்வதற்கு நாம் முயற்சித்தோம்.

பௌத்த பிக்குமார் என்ற வகையில் எம் மனதில் ஒரு காலமும் தமிழருக்கெதிரான மனோபாவம் இருந்ததில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சிங்கள பௌத்த கலாசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரபல அரசியல்வாதியின் மகனால் பாடசாலை மாணவி கடத்தப்பட்டார் !

(கொழும்பு)

பிரபல அரசியல்வாதி ஒருவரின் மகன், 16 வயதான பாடசாலை மாணவியை பலவந்தமாக அழைத்துச் சென்று ஒரு வருடமாக தடுத்து வைத்துள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை கொழும்பு கிருளப்பனையை சேர்ந்த வர்த்தகரான காமினி ரணசிங்க மற்றும் அவரது மனைவியான தாமீனி இந்திரா ரொட்றிகோ ஆகியோர் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமைச்சரின் மகன் அமைச்சுக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று அதிகாரத்தை குறைக்கும் 19-ம் திருத்தத்திற்கு அமை. அங்கீகாரம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

19-ம் திருத்தச் சட்டம் தொடர்பிலான உத்தேச வரைவுத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உத்தேச யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பிலான வர்த்தமானி அறி 23ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லிக்கு மலையக தலைவர்களை வருமாறு இந்தியப் பிரதமர் அழைப்பு

## மனோ கணேசன் தகவல்

(கொழும்பு)

மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய அம்மக்களின் தலைவர்களை புதுடில்லிக்கு வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கான இரண்டு நாள் அதிகார பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு மற்றும் வடபகுதிக்கு மட்டுமே சென்றிருந்தார்.

இலங்கையின் கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளுக்கு அவர் செல்லாதமை தொடர்பில் வருத்தமும், ஏமாற்றமும் வெளியிடப்பட்டிருந்த நிலையில், இந்தியா புறப்படும் முன்னர் மலையகத் தலைவர்களை நரேந்திர மோடி சந்தித்தார்.

இச்சந்திப்பில் தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர் மனோ கணேசன், அமைச்சரவை அமைச்சர் பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர்கள் ராதாகிருஷ்ணன், எம்.வேலாயுதம் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் கலந்து கொண்டனர்.



இதன்போது மலையகப் பகுதி தொடர்பான தகவல்கள் தன்னிடம் போதியமான அளவில் இல்லை என்றும், அவற்றை சேகரிக்கும் நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தங்களிடம் குறிப்பிட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்துடன் போதிய நேரமின்மை மற்றும் பயண ஏற்பாடுகள் தொடர்பிலான பிரச்சினைகள் காரணமாகவே தன்னால் மலையகப் பகுதிக்கு வரமுடியவில்லை என்று நரேந்திர மோடி கூறியதாகவும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இதையடுத்தே அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில், மலையகத் தலைவர்களை புதுடில்லி வருமாறு இந்தியப் பிரதமர் அழைப்பு விடுத்ததாக மனோ கணேசன் கூறியுள்ளார்.

இலங்கையில் அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை இந்தியப் பிரதமர் சூசகமாக தங்களிடம் தெரிவித்ததாகக் கூறும் மனோ கணேசன், மலையகப் பகுதியில் 20 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தர இந்தியப் பிரதமர் உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மலையக மக்களின் நலன்களின் இந்தியா கரிசனை கொண்டுள்ளது என்பதையும் அவர் தங்களிடம் கூறியதாக மனோ கணேசன் மேலும் கூறினார். (செ)

## படகின்றி திரும்ப மீனவர்கள் மறுப்பு

(கொழும்பு)

படகுகள் இன்றி திரும்பிச் செல்ல இந்திய மீனவர்கள் மறுப்பு தெரிவித்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்ட 86 இந்திய மீனவர்களின் அரைவாசி பேர், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகள் இன்றி நாடு திரும்ப மறுப்பு வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 43 பேரே படகுகள் இன்றி நாடு திரும்ப மறுத்துள்ளனர்.

இந்திய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இலங்கையர்கள் தமது படகுகள் சகிதம் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளமையை இந்திய மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ)

# பொதுத் தேர்தலில் ஐ.தே.கவின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கும்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டிற்கு பின்னர் நடத்தப்படும் பொது தேர்தலில் அதிக உறுப்பினர்களை ஐக்கிய தேசிய கட்சி வெற்றிகொள்ளும் என அந்த கட்சியின் தேசிய தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாகலங்கம் பிரதேசத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் விரிவாக்கல் நடவடிக்கையின் போதே பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் ஒத்துழைப்புடன் பணியாற்ற தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கம் ஆரம்பித்த அபிவிருத்தி-வேலைத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்கட்சிகளிடமிருந்து தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதிலளித்தார்.

அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு கடந்த அரசாங்கம், நிதி வழங்காமலேயே வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

அபிவிருத்தி பணிகள் நின்று விட்டன என்று எதிர்க்கட்சிகள் கூச்சல் போடுகின்றன. ஏன் நின்றன. கிடைக்கப் பெற்ற வங்கி முறிகளின் மூலமாக நாங்கள் 10 பில்லியன்களை பெற்று அவற்றுக்காக வழங்கியுள்ளோம்.

பணிகளை ஆரம்பிப்பதற்காக நிதி வழங்கப்படவில்லை. பெரியளவிலான நிறுவனங்களுக்கு பல வருடங்களாக அபிவிருத்திக்கான நிதி வழங்கப்படவில்லை.

வடக்கு அதிவேக வீதி பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்படாமல் 4 நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த நிறுவனங்கள் தமது பணிகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டு மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதற்காக பல கோடிகள் செலவிடப்பட்டன.

மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். அவர் தோற்றபின்னர் அந்த பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்று எங்களிடம் வினவினார்கள். அந்த செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு அந்த தருணத்தில் நிதியிருக்கவில்லை.

நாங்கள் அதற்கான நிதியை திரட்டினோம். பாரியளவில் ஊழல் இடம்பெற்றிருக்கிறது. இப்போது தீய கனவுகள் பகலிலேயே தெரிகின்றன.

மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் பெற்ற கடன்களை அடைப்பதற்கு எங்கள் பிள்ளைகளின் பேரப்பிள்ளையின், பேரப்பிள்ளைதான் வர வேண்டும். அப்படியான யுகத்தைதான் அவர்கள் தோற்றுவித்துள்ளார்கள். அதற்கு ஐக்கிய தேசிய கட்சிதான் நிர்வாகத்தை பொறுப் பேற்க வேண்டும்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

தற்போது அரசியலில் புதிய யுகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நான் தனியாக இந்த அரசியலில் ஈடுபட தீர்மானிக்கவில்லை. ஏனைய கட்சிகள் குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சி என பன மிகவும் சவாலான தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுத்தே இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என ரணில் குறிப்பிட்டார். (செ)

## தேசிய அரசாங்கம் இரகசிய வாக்கெடுப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் குறித்து சிறிலங்கா சுதந்திர கட்சியில் இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு கோரப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்திஹெட்டிகம இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வரும் நோக்கில் செயற்படுகின்ற சிறிலங்கா சுதந்திர கட்சியின் காலி மாவட்ட உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திர கட்சி இணைவதில் பெரும்பாலானவர்களுக்கு விருப்பம் இல்லை.

எனவே முடியுமாக இருந்தால் இது குறித்த இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு அவர் தெரிவித்துள்ளார். (செ)

# மாவட்ட அரச அதிபர்கள் 12 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபர்கள் 12 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் உயர்மட்ட பதவிக்கு அதிகாரிகளை நியமித்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் உப குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களுக்கும் அதிக காலம் ஒரே இடத்தில் சேவையாற்றியவர்களுக்கும், சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் கோரியவர்களுக்கும், இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டதாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எஸ். டீ.ஏ.பீ.பொரலெஸ்ஸ தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை, புத்தளம், பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கம்பஹா, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்ட அரச அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 8 மாதத்திற்குள் மேலும் பல அரசாங்க அதிபர்களுக்கான இடமாற்றம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எஸ். டீ.ஏ.பீ.பொரலெஸ்ஸ குறிப்பிட்டார். (செ)


## கேக் டெக்கரேற்றர் தேவை


நெல்லியடியில் புதிய நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த கேக் டெக்கரேற்றர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:-0768373190

(சி-377)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சங்கரப்பிள்ளை கனகராசா



எமது நிறுவனத்தின் உப தலைவர் வைத்திய கலாநிதி K.நந்தகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார் கடந்த 13.03.2015-ம் திகதி அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

47/2 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
நிர்வாக சபை அங்கத்தவர்கள், உறுப்பினர்கள்,
ஊழியர்கள், இல்லப் பிள்ளைகள்

(சி-375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலுள்ள தமிழர்களைவிடுவிக்க புதிய அரசாங்கம் துரித நடவடிக்கை!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர், யுவதிகள் மீது குற்றச்சாட்டு எதுவும் உள்ளதா என சட்டமா அதிபரிடம் வினவப்பட்டுள்ளது. அந்த முடிவுகள் வெளியாகியதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளோர் குறித்து விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஏனையோர் நிரபராதிகள் எனில் அவர்கள் உடனடியாகவே விடுவிக்கப்படுவர் எனத் தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக விரைவில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.**

தேர்தலில் தமிழ் மக்களுக்கு உறுதியளித்த விடயங்களுள் இதுவும் ஒன்று. அதனால் எனது அமைச்சின் கீழ் வரும் இவ்விடயம் தொடர்பான ஆரம்பகட்ட வேலைகளை நாம் எப்போதோ ஆரம்பித்து விட்டோம். குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது சிறைகளில் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இவர்கள் மீது குற்றச்சாட்டு எதுவும் உள்ளதா என சட்டமா அதிபரிடம் வினவப்பட்டுள்ளது. அந்த முடிவுகள் வெளியாகியதும் குற்றச் சாட்டுக்கள் உள்ளோரின் விசாரணைகளை துரிதமாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனையோர் நிரபராதிகள் எனில் அவர்கள் உடனடியாகவே விடுவிக்கப்படுவர்.

சிறைச்சாலைகளில் எத்தனை தமிழ் இளைஞர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை எவ்வாறு இனங்காணுகிறீர்கள்? என்பது குறித்து உண்மையில் சட்டமா அதிபர் திணைக்களமே மேற்கொண்டு வருகிறது. சுமார் 500 வரையிலான தமிழ் இளைஞர்கள் இருப்பதாக அறியக் கிடைக்கிறது. நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் சகலவற்றிலும் இதற்கான கணக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மிகச் சரியான தகவல்களை இன்னும் ஓரிரு வாரங்களில முழுமையாகப்பெற்றுக்கொள்ளலாம்.

வெறுமனே சந்தேக நபர்கள் எனும் குற்றச்சாட்டிலும் பலர் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமா?

அது குறித்து இப்போது நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம். பொலிஸார் இவர்களை விடுவிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்தால் இத்தகையவர்கள் மீது வழக்குகள் எதுவும் தொடரப்படாது அவர்கள் விடுவிக்கலாம். அதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

அதேவேளை வழக்குத் தொடரப்பட்டு அவை முடிவுக்கு வராத நிலையிலுள்ளோரும் சிறைகளில் உள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி அவர்கள் குற்றமிழைத்திருந்தால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட வாய்ப்பும் உள்ளது.

கடந்த அரசாங்கத்தில் இருந்த நீதி அமைச்சர்களும் இதேபோன்ற பதிலையே முன்னரும் தெரிவித்து வந்தனர். இந்நிலையில் நீங்கள் கூறுவது சாத்தியமாகும் வாய்ப்பு உள்ளது என நம்பலாமா?

நிச்சயமாக. நாங்கள் புதிய அரசாங்கம் ஒன்றையே பொறுப்பேற்றுள்ளோம். அத்துடன் நூறு நாள் வேலைத்திட்டம் தொடர்பாகவும் மக்களுக்குப் பல உறுதி மொழிகளை வழங்கியுள்ளோம். அவை யாவுமே ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதேபோனறே இப்பிரச்சினைக்கும் நிச்சயமாக நல்லதோர் தீர்வு காணப்படும்.

நீங்கள் குறிப்பிடுவது போன்று நூறு நாள் வேலைத்திட்ட காலப் பகுதியினுள் இக்கைதிகள் விடயத்திற்குத் தீர்வு காணப்பட்டு விடுமா?

நிச்சயமாக. எமது நூறு நாள் திட்டம் முடிவடைவதற்குள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரது விபரங்கள் பெறப்பட்டு ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாகிவிடும். அதற்காக அவசர அவசரமாக சட்ட வரம்புகளை மீறி எதனையும் செய்ய முடியாது. சட்டத்தை முறையாக அமுல்படுத்தி இவ்விடயத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும். அதனால் எவரும் அவசரப்படத் தேவையில்லை. இப்போது சட்டம் தனது கடமைகளைச் செய்கிறது.

இல்லை, மிக நீண்ட காலமாக இவ்வாறு குற்றமெதுவுமே இழைக்காத பலர் எவ்விதமான காரணமுமின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் அவர்களது உறவினர்கள் இவ்விடயத்தில் ஒரு தீர்வினைக் கண்டுவிடுவதில் ஆவலாக உள்ளனர். அதனால் தான் இக்கேள்விகளைத் துருவிக் கேட்கும் நிலை உருவாகியது.

அதில் தவறில்லை. உண்மையில் கடந்த அரசாங்கம் விட்ட தவறுகளை நாம் இப்போது திருத்தி வருகிறோம். சிறைகளில் காரணம் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காக எதிர்க்கட்சியிலிருந்தபோது நானும் குரல் கொடுத்தவன் என்ற வகையில் எனக்கு அந்த மக்களின் ஆதங்கம் நன்கே தெரியும். எனவே இவ்விடயத்தில் எனக்கு அதிகளவு அக்கறை உள்ளது. இனியும் இவ்விடயத்தில் சட்டம் தவறிழைக்க நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என அமைச்சர் கொழும்பிலுள்ள ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர் காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-5)




இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வீதிகளுக்கு 20 பேருந்துகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் , வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதேவேளை மேற்படி பேருந்து கையளிக்கும் நிகழ்வு யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் இடம்பெற்றதால் பேருந்து போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டதாகவும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டதாகவும் பயணிகள் கவலை தெரிவித்தனர். (இ-3)

## மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய ஜய வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்- 2015 எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியோற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 3 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்ம கர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

## இசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த கலைமாமணி ஏ.கே.சி.நடராஜனின் கிளாரிநெற் இசைக்கச்சேரி இன்று திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் கிழவன்காடு மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாதஸ்வரம் பெங்களூர் ரமேஸ்பாபு, தவில் மன்னார்குடி கலைமாமணி எம்.ஆர்.வாசுதேவன் மற்றும் கோவிலூர் கலைமாமணி கே.ஜி.கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## மழலைகளின் கண்காட்சி

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளி மழலைகளின் கண்காட்சி நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3மணிவரை மத்திய முன்பள்ளி மண்டபத்தில் மத்திய முன்பள்ளி தலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி மு.தயாபரக்குருக்கள், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண முன்பள்ளி வலயக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் மற்றும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் சி.சத்தியவரதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினராக ஆவரங்கால் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. சகீலாமற்றும்வலி.கிழக்கு முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.த. ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## இராசி பலன்

16.03.2015
பங்குனி 02, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.00 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 6.45 மணிவரை
இராகுகாலம் 7.50-9.20 மணிவரை
சுபநேரம் 12.20-1.50 மணிவரை
பங்குனித் திங்கள், ஏகாதசி விரதம்

வளவன்

**மீனம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கனவு பலிதமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர் நலன் கருதிய சில செலவுகள் ஏற்படலாம், இறை வழிபாட்டில் நாட்டம் கூடும், தொழிலில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், வேலைச்சுமை கூடும் சயன சுகக் குறைவுண்டு.

**கடகம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், உறவினர்கள் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ் நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** இனிமையான நாள், உடல்நலம் சீராகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும், பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உறவினர் வழியில் அன்புத் [illegible]

**துலாம்:** வருமானம் வரும் வழியை கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும் உற்சாகத் தோடும் பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமையான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரம் முதலீட்டுக்கான சாதகநிலையை உறுதி செய்கிறது- நிதிஅமைச்சர்

நாட்டின் பொருளாதாரம் முதலீட்டுக்கான சாதக நிலையை உறுதி செய்திருப்பதாகவும் அடுத்துவரும் சில வருடங்களுக்கு பொருளாதாரத்தை சரியான வழியில் இட்டுச் செல்வதற்கான தெளிவான வழிமுறைகளாக இது அமைந்திருக்கும் என்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பெரு நிறுவனத் துறையினர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பொருளாதாரம் தொடர்பான அரசாங்கத்தின் தேசிய கொள்கையை அறிவிப்பதாக குறிப்பிட்ட அமைச்சர், நிதி அமைச்சருடனான ஓர் உரையாடல் என்ற தொனிப் பொருளில் கொழும்பு ஹில்டனில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை சபையின் தலைவர் ரோஹந்த அத்துகோரளை, ஏற்றுமதிகள் அபிவிருத்திச் சபையின் தலைவர் பந்துல எகோடகே, வேட்சுவர் வர்த்தக பாடசாலையின் நிறைவேற்று அதிகாரி கஜேனந்திரலியன ஆராய்ச்சி உள்ளிட்டோரும் இங்கு உரையாற்றினர்.

கலால் வரித் திணைக்களம் கடந்த 20 நாட்களில் 4 பில்லியன் ரூபாயை சேகரித்துள்ளது. முன்னைய அரசு வருடத்தில் சேகரித்த தொகையுடன் ஒப்பிடுகையில் இத்தொகை அதிகமானதாகும். சுங்கப் பகுதியின் வருமானம் 12 பில்லியன் ரூபாயினால் கடந்த 12 மாதங்களில் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னைய அரசாங்கத்தினால் கலால் வரி மூலம் முழு வருடத்திலும் 4 பில்லியன் ரூபாயை மாத்திரமே வசூலிக்க முடிந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தினால் ஒரு மாதத்திற்குள் இத்தொகையை வசூலிக்க முடிந்ததுள்ளது என்றார். வருட இறுதிக்குள் அரசாங்கத்தினால் 48 பில்லியன் ரூபா அல்லது அதற்கு மேலான தொகையை வசூலிக்க முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

நல்லாட்சி நடைமுறை வந்ததைத் தொடர்ந்து இந்த முறையின் கீழ் வருமான அதிகரிப்பை உங்களால் காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இதன் ஊடாக உண்மையான வருமானம் பொருளாதாரத்தை வந்தடைவதுடன் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைவதற்கு இந்த நடைமுறை எதிர்காலத்தில் மேலும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கான சமீபத்திய விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், சர்வதேச நாணய நிதியத்துடனும் அரசு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறினார்.

அரசினால் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை தெளிவாக உறுதிப்படுத்தியதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ளவற்றையும் குறிப்பிட்டதாகவும் அவர் கூறினார்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் சிறந்த பொருளாதார செயற்பாடுகளுக்கான கோரிக்கையை முன்வைத்ததுடன் இவை வெளிப்படையானதாக அமைந்திருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டன. வழமையாக நாட்டிற்கு வழங்கப்படும் ஒத்துழைப்பிலும் பார்க்க 3 அல்லது 4 மடங்கு ஒத்துழைப்பை இவர்கள் வழங்குகின்றனர். நாம் மேற்கொண்ட உறுதியான பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இது சாதகமானதாக அமைந்ததாக அமைச்சர் கருணாநாயக்க குறிப்பிட்டார். நாட்டு மக்களுக்கு உதவுவதற்காக நிபந்தனையற்ற கடனை பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. பொதுவாக மக்கள் மீது சுமைகளை ஏற்படுத்தும் வகையிலேயே சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் கடன்களை வழங்குவது வழமை. இறக்குமதி, சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவுகளை குறைப்பதற்கு வலியுறுத்தாத வகையில் அவர்கள் எமக்கு உதவுவதற்கு வழிசெய்ய முடிந்தது என்றும் அமைச்சர் கூறினார்.

## செலான் வங்கி வரிக்கு பின்னரான இலாபம் 3 பில்லியனைவிட அதிகரிப்பு



2014 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் செலான் வங்கியானது சாதனை மிகுந்த வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 3,079 மில்லியனை பதிவு செய்திருக்கின்றது. 2013ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,316 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஏற்பட்டுள்ள மனதில் பதியத்தக்கதொரு 33 சதவீதமான வளர்ச்சியாக இது அமைந்துள்ளது.

2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த 12 மாத காலப் பகுதியில் தேறிய வட்டி வருமானம் ரூபா 9,719 மில்லியனில் இருந்து ரூபா 11,165 மில்லியனாக 14.9% இனால் அதிகரித்துள்ளது. கட்டணம் மற்றும் தரகு வருமானம் ரூபா 2,127 மில்லியனில் இருந்து ரூபா 2,257 மில்லியனாக 6.1% இனால் உயர்வடைந்தமையானது கடந்த பல வருடங்களாக செலான் வங்கி அடையப்பெற்ற திடமான வளர்ச்சிப் போக்கின் ஒன்றுதிரண்ட பெறுபேற்றை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது. இதேவேளை, வணிக நடவடிக்கையில் இருந்தான தேறிய உழைப்பு, நிதியியல் கருவிகள் மீதான உழைப்பு, வெளிநாட்டு நாணயமாற்று மூலம் கிடைக்கப்பெற்ற உழைப்பு மற்றும் ஏனைய வருமானம் உள்ளடங்கலாக ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 1,023 மில்லியனில் இருந்து ரூபா 2,809 மில்லியனாக 174.61% இனால் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. அரச பிணையங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற மூலதன உழைப்புக்களே இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. 2014ஆம் ஆண்டில் செலவுகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு 10.99% ஆக கட்டுப்படுத்தப்பட்டமை மனதில் பதியத்தக்க இந்த செயற்பாட்டிற்கு ஆதரவளித்திருக்கின்றது.



ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மந்தமான கடன் கேள்வியானது 2014 இன் 3-ம் மற்றும் 4-ம் காலாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கின் காரணமாக அடுத்த அரையாண்டு காலப்பகுதியில் தலைகீழாக மாற்றமடைந்தது. 2013 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 136,553 மில்லியன் தேறிய முற்பணம் 2014-ல் ரூ. 154,963 மில்லியனாக உயர்வடைந்த நிலையில், செலான் வங்கியானது 13.48% தேறிய கடன் வளர்ச்சியை பெற்றுள்ளது. 2014ஆம் ஆண்டில் வங்கி தனது வைப்புத்தளத்தை ரூபா 167,371 மில்லியனில் இருந்து ரூபா 185இ924 மில்லியனாக அதிகரித்துக் கொண்டுள்ளது.

2014 டிசம்பர் 31ஆம் திகதி இருந்தவாறு செலான் வங்கியின் சேவை நிலைய வலையமைப்பானது 157 கிளைகள், 177 ATM மையங்கள் மற்றும் 94 மாணவர் சேமிப்பு நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## களனி கேபிள்ஸின் விருதுகள்



களனி கேபிள்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முன்னணி தயாரிப்புகளில் ஒன்றாக களனி Insulation Tape அமைந்துள்ளது. பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்கள் கேபிள்கள் விற்பனையில் முன்னணியில் திகழும் களனி கேபிள்ஸ் பிஎல்சி, களனி Insulation Tapes விற்பனையில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தவர்களுக்கு விருதுகளையும்,தாய்லாந் துக்கான வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளையும் வழங்கி கௌரவித்திருந்தது.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற இந்த விருதுகள் வழங்கும் வைபவத்தில் களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால பங்கேற்றிருந்தார்.

களனி Insulation Tapes.பிரிவின் உதவி விற்பனை முகாமையாளரான கிஹான் பெர்னான்டோ சிறந்த விற்பனை முகாமையாளர் 2014 எனும் விருதை தனதாக்கியிருந்தார். உத்திக விஜேசிங்க சிறந்த விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிக்கான விருதை பெற்றுக் கொண்டார்.

களனி Insulation Tapes என்பது இலங்கையில் காணப்படும் சகல Insulation Tapes வகைகளிலும் அதிகளவு விற்பனையை தன்னகத்தே கொண்ட தயாரிப்பாகும். 2014 இல், இந்த தயாரிப்பு, நான்கு மில்லியன் அலகுகள் விற்பனையாகியிருந்தன. இதில் நேரடியாக பங்களிப்பை வழங்கியிருந்த மூன்று பிராந்திய விற்பனை முகாமையாளர்கள் மற்றும் ஆறு விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையின் கம்பனியாக கடந்த 4 தசாப்த காலமாக களனி கேபிள்ஸ் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## CTC சிறந்த வி/னை ஊழியர், விநியோகஸ்தரை கௌரவித்தது

சிலோன் டொபாக்கோ கம்பனியின் சிறந்த விற்பனை சந்தைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் விநியோகத்தர்களை கௌரவிக்கும் வகையில் "பின்னகல் விருதுகள் 2015"எனும் நிகழ்வு நிறுவனத்தின் மூலம் அண்மையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிலோன் டொபாக்கோ கம்பனியின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார் பங்குபற்றியிருந்தனர்.

நிறுவனத்தின் விற்பனை சந்தைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் விநியோகத்தர்களின் கடந்த ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்த சிறப்பான செயற்பாடுகள் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், நடப்பு ஆண்டில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்த அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் இந்நிகழ்வு அமைந்திருந்தது.



விற்பனை சந்தைப்படுத்தல் பிரிவில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்த 4 அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 8 சிறந்த விநியோகத்தர்கள் 2014ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்நிகழ்வு மிகவும் கண்கவர் நிகழ்வாக இது அமைந்துள்ளது.

## இந்தியா-இலங்கை நாணய ஒப்பந்தம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான நாணய பரிமாற்று உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை அடுத்து இந்த இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

இந்தியாவின் ரிசர்வ் வங்கிக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் இந்த நாணய பரிமாற்று உடன்படிக்கை கைச் சாத்தானது.

இதன் மூலம் இலங்கையின் நாணயப் பெறுமதி நிலையான தன்மையை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,183.50 | 7,091.25 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,097.05 | 4,047.97 ⇩ |
| **விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) | 2,954.714 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஈஸ்ரன் மேர்சண்ட்(11.90),புளு டைமன்ட்ஸ்(X) (0.70), புளு டைமன்ட்ஸ்(1.40),சிலாவ் பினான்ஸ்(25.10),சிலோன் லெதர்(w)(2.60).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிரஸ் லிசர்(0.30), சாம்சன் இன்ரனட்(85.10), செரன்டிப் லான்ட்(1,012.00), ஹோட்டல் சிகிரியா(80.00), ஹபுகஸ்ரேன் (30.40),

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.86 | 134.67 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 195.45 | 201.05 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 139.01 | 143.67 |
| சுவிஸ் பிராங் | 130.54 | 135.09 |
| கனேடிய டொலர் | 103.19 | 106.60 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.61 | 104.60 |
| சிங்கப்பூர் டொலர் | 94.96 | 98.01 |
| ஜப்பான் யென் | 1.08 | 1.11 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை சுதந்திரக் கட்சியின் வடமாகாண சபை உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் சுயதொழில் விருத்திக்கென நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் சக்கர நாற்காலிகளை வழங்கிய போது...




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் தொடர்ச்சியாக கரவெட்டியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு அண்மையில் துவிச்சக்கரவண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்ட போது...







யாழ்ப்பாணம் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...





போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு சுவிஸ் நாட்டு செந் தமிழ்ச் சோலையின் அனுசரணையுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் அண்மையில் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்ட போது...





தீவகக் கல்வி வலய ஆங்கில தினமும் 2014 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் யா/ வேலணை மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற போது...

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

நிழல்கள்





வடமராட்சி சக்கோட்டையில் நடைபெற்ற கிளித்தட்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)







வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்ற வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கரவெட்டி சின்னையா தம்பதி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் டாக்டர். திரு.திருமதி கேதீஸ்வரனுக்கு பரிசில் வழங்குவதையும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெயிலும் நிழலும்


...வாழ்க்கையில் பொற்காசுகளையே பார்த்திராத அவன் ஒரே சமயத்தில் நூறு பொற்காசுகள் கிடைக்கும் என்ற அறிக்கை அவன் ஆசையைத் தூண்டியது. அந்தத் தொகை மட்டும் கிடைத்தால், அவனுடைய ஏழ்மை பரிபூரணமாக விலகிவிடும்.

அதைப்பற்றி அவன் தன் மனைவியிடம் விவாதித்தபோது, அவள், "நமக்குப் பக்கத்து வீட்டில் சில நாட்களுக்கு முன் குடிவந்து இருக்கும் வீரேந்திரனைக் கேட்டுப் பாருங்களேன்!

அவன் அதிபுத்திசாலியாகக் காணப்படுகிறான். அவன் நிச்சயம் இதற்கு ஏதாவது ஒருவழி கூறுவான்" என்றாள்.

அவ்வாறே அவன் தன்னுடைய பக்கத்து வீட்டுக்காரனான வீரேந்திரனை யோசனை கேட்டவுடன் அவன் உடனே, "அது ஒன்றும் கஷ்டம் இல்லையே! நீ ஒரு நாற்காலியை அல்லது சோபாவைத் தலைக்கு மேல் சுமந்து போ! உன் மேல் வெயில்படாது!" என்று வீரேந்திரன் கூறினான்.

"ஆகா! என்ன அருமையான யோசனை? இது ஏன் யாருக்குமே தோன்றவில்லை!" என்று மகிழ்ச்சியுடன் கூவிய அந்த ஏழை, "நான் நீ கூறியவாறு நாளைக்கே தலைநகர் ஆக்ராவிற்குச் செல்லப் போகிறேன்" என்றான்.



அவ்வாறே மறுநாள் கிளம்பிய அவன் தலைக்குமேல் ஒரு சிறிய சோபாவைத் தூக்கிக்கொண்டு கால்நடையாகவே அக்பரின் தர்பாரை அடைந்தான்.

"பிரபு! குடை இல்லாமலே கொளுத்தும் வெயிலில் என் கிராமத்தில் இருந்து இங்கு கால் நடையாக வந்துதிருக்கிறேன்!" என்று பரபரப்புடன் அறிவித்தான்.

"சபாஷ்! யாருக்குமே தோன்றாத இந்த யோசனை உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்டார்.

"பிரபு! உண்மையில் எனக்கு இந்த யோசனையை சொல்லிக் கொடுத்தது என் பக்கத்து வீட்டுக்கார வீரேந்திரன்!" என்றான் ஏழை!

அது பீர்பால் தான் என்று யூகித்துக் கொண்ட அக்பர் தன் திட்டம் பலித்ததையெண்ணி மிக மகிழ்ச்சியுற்றார்.

நான் அறிவித்தபடியே உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். அந்தப் பணத்தை உன் கிராமத்திற்கு பத்திரமாக எடுத்துச் செல்ல உன்னுடன் இரு காவலர்களையும் அனுப்புகிறேன்.

நீ உன் வீட்டை அடைந்ததும், அந்த புத்திசாலி வீரேந்திரனை காவலர்களிடம் ஒப்படைத்து விடு!" என்றார்.

அவ்வாறே மிக்க மகிழ்ச்சியுடன் அந்த ஏழை இருவீரர்களின் துணையுடன் தன் வீட்டை அடைந்தான்.

அவன் அடையாளம் காட்டிய வீரேந்திரனைக் காவலர்கள் தங்களுடன் அழைத்துக்கொண்டு ஆக்ரா திரும்பினர்.

தர்பாரில் நுழைந்த வீரேந்திரன் தன் முகத்தை ஒரு பையினால் மூடிக் கொண்டு வந்தான்.

"வீரேந்திரா! உன் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய்? பையை அகற்று!" என்றார் அக்பர்.

"பிரபு! நான் வீரேந்திரன் இல்லை! நான்தான் பீர்பால்! உங்கள் முகத்தில் இனி நான் விழிக்கக் கூடாது என்ற உங்கள் கட்டளைப்படியே நான் எனது முகத்தை மூடிக்கொண்டு வந்து உள்ளேன்!" என்றான்.

"பீர்பால்! உன் முகத்தை நான் இப்போதே பார்க்க விரும்புகிறேன்! இதுவும் என் கட்டளையே!" என்று கூறிய அக்பர் தானே முன்சென்று பையை அகற்றி விட்டு, பீர்பாலை மிகுந்த பிரியத்துடன் கட்டித் தழுவிக் கொண்டார்.

(முற்றும்)

03.2015
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 597 - பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப் பற்றினர்.
- 1190 - சிலுவைப் படையினர் (Crusaders) யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- 1521 - மகலன் பிலிப்பைன்சை அடைந்தான்.
- 1792 - சுவீடன் மன்னன் மூன்றாம் குஸ்டாவ் சுடப்பட்டான்.
- 1926 - மசாசுசெட்சில் ராபர்ட் கொடார்ட் என்பவர் முதலாவது திரவ-எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை செலுத்தினார்.
- 1939 - பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பெஹேமியா, மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.
- 1942 - முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது).
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.
- 1962 - மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமற்போனது.
- 1966 - ஜெமினி 8, நாசாவின் 12 ஆவது மனிதரைக் கொண்டுசென்ற விண்கலம், ஏவப்பட்டது.
- 1968 - வியட்நாம் போர்: மை லாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 350 முதல் 500 வரையிலான வியட்நாமியர்கள் அமெரிக்கப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1985 - அசோசியேட்டட் பிரஸ் ஊடகவியலாளர் டெரி ஆண்டர்சன் பெய்ரூட் நகரில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் டிசம்பர் 4, 1991 இல் விடுதலை ஆனார்.
- 1988 - ஈராக்கில் குருதிய நகரான ஹலப்ஜாவில் நச்சு வாயுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 2006 - மனித உரிமைகளுக்கான ஐ.நா அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்தது.


### பிறப்புக்கள்

- 1751 - ஜார்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1836)
- 1789 - கியோர்க் ஓம், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1854)
- 1839 - ரெனே சளி-புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1907)
- 1918 - பிரெடெரிக் ரெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1998)
- 1929 - இரா. திருமுருகன், தமிழறிஞர்
- 1953 - ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயககம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்.

### இறப்புக்கள்

- 1914 - சார்ல்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1843)
- 1935 - ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1940 - செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1858)
- 1945 - எம். ஜே. லெகொக் அடிகளார், அருட்தந்தை (பி. 1880)
- 1989 - அழ.வள்ளியப்பா குழந்தை இலக்கிய கவிஞர். (பி. 1922)
- 1998 - டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)

## அழ. வள்ளியப்பா



அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000 க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார்.

இவர் இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவர சுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

தொடர்ந்து படிக்க முடியாததால் 1940 ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி, வை. கோவிந்தனின் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார்.

அப்போது சக்தி ஆசிரியராக இருந்த தி.ஜ.ர.வின் ஊக்குவிப்பின் காரணமாக சக்தி இதழிலேயே எழுத ஆரம்பித்தார். "ஆளுக்குப் பாதி" என்னும் தம் முதல் கதையை எழுதினார்.

1941 இல் சக்தியில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். வங்கிப் பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய செய்தித் தாள்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார்.

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950 இல் குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச்சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

"சிங்காரி பியாரி பியாரி" "உன்னைப் பார்த்த நேரம்" "யார வந்தது நெஞ்சுக்குள்ளே" "பாட்டுக்கு பாட்டெடுக்கவா" போனற பாடல்கள் ரசனைக்குரியவை.

படத்தில் சோ நாகேஷ் செந்தாமரை வி.கே.ராமசாமி மற்றும் கிழக்கே போகும் ரெயில் படத்தில் பாரதிராஜாவால் கதாநாயகனாக அறிமுகம் செய்யப்பட்ட சுதாகரும் நடித்திருந்தனர். படத்தில் வில்லனும் இவரே. காமெடியும் இவரே.

மாதவி கௌரவ வேடத்தில் தோன்றினார். நிறைய செலவு செய்து பிரமாண்டமான செட்டுகள் அமைத்து படம் எடுத்திருந்த போதிலும் ரஜினி ரசிகர்களை கதை கவரவில்லை.

15-6-1990இல் வெளிவந்த இப்படம் 75 நாட்கள் ஓடியது.

ஸ்டைல் மன்னன் ரஜினிகாந்த், குணச்சித்திர வேடம் ஏற்று, வெற்றிக்கொடி நாட்டிய படங்களில் ஒன்று "தர்மதுரை."

ராசி கலாமந்திர் தயாரித்த படம் இது. ரஜினிக்கு ஜோடி கௌதமி. வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுத, ராஜசேகர் டைரக்ட் செய்தார். இசை: இளையராஜா.

இந்தப் படத்தில், ரஜினியின் தந்தையாக பிரபல மலையாள நடிகர் மது நடித்தது குறிப்பிடத்தக்கது. ரஜினியின் தம்பிகளாக நிழல்கள் ரவி, சரண்ராஜ், விஜய்பாபு ஆகியோர் நடித்திருந்தனர்.

"அப்பாவியாய் இருப்பது தவறில்லை. மற்றவர்களிடம் ஏமாந்து வாழ்க்கையை தொலைக்கும் அளவுக்கு அப்பாவியாய் இருப்பதுதான்



ரஜினி- கௌதமி படம் தர்மதுரை

தவறு என்பதை கதைக் கருவாக்கியிருந்தார்கள்.

சொந்த சகோதரர்களுக்காக தன் வாழ்வை பணயம் வைத்து பாதிக்கப்பட்ட ரஜினி, தனது பிற்பகுதி வாழ்க்கையிலாவது மீண்டாரா? என்பதை அழுத்தமான காட்சிகளுடன் தந்திருந்தார், டைரக்டர் ராஜசேகர்.

### கதை

தம்பிகளுக்காக எதையும் செய்யும் ஒரு அப்பாவி அண்ணன ரஜினி. தம்பிகள் இந்த அப்பாவி அண்ணனை தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் இது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. பாசமாக இரு! ஆனால ஏமாளியாக இருக்காதே! என்று ரஜினிக்கு அவ்வப்போது எடுத்துச் சொல்கிறார். ஆனால் ரஜினி கேட்பதாக இல்லை. நான் வாழ்வதே தம்பிகளுக்காகத்தான் என்கிறார்.

உன் தம்பிகள் சுயநலக்காரர்கள். அவர்களை நம்பி ஏமாந்து போகாதே என்று மறுபடியும் எச்சரிக்கிறார். ரஜினி அதைக் கேட்கவில்லை.

இதனால் என் மரணத்துக்குப் பிறகுதான் நான் கூறுவதன் உண்மையை உணர்வாய். அப்போதாவது சுதாரித்துக் கொண்டு, உன்னைக் காப்பாற்றிக்கொள் என்கிறார், அப்பா.

காலம் விரைகிறது. ரஜினிக்கும் திருமணமாகிறது. மனைவி கௌதமியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அப்பா இறந்து போகிறார்.

இதன் பிறகு தான் விதி விளையாடுகிறது. ரஜினியின் தம்பிகளில் ஒருவர், சந்தர்ப்ப சூழ்நிலையால் கொலையாளி ஆகிவிடுகிறார். ஜெயிலுக்குப் போனால் மனைவி, குழந்தைகள் நிர்க்கதியாகி விடுவார்கள் என்று பயப்படும் அவர், தனது அண்ணன் ரஜினியிடம் தன்னைக் காப்பாற்றும்படி கண்ணீர் விடுகிறார்.

கொலைக்குற்றம் என்றதும் தயங்கும் ரஜினியிடம், இலட்சங்களை வாரியிறைத்து உன்னை சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றி விடுவோம். எனக்காக ஜெயிலுக்குப் போ அண்ணா என்று வேண்டுகிறார் தம்பி. மற்ற இரண்டு தம்பிகளும், ரஜினியிடம் கெஞ்சுகிறார்கள. அதனால், செய்யாத குற்றத்தை தான் செய்ததாகக் கூறி பழியை ஏற்கிறார், ரஜினி. அவரை பொலீஸ கைது செய்கிறது. கோர்ட்டு அவருக்கு 7 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கிறது.

தம்பிகளிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை. தம்பிகளின் துரோகத்தை தெரிந்து கொள்கிறார், ரஜினி. தண்டனைக் காலம் முடிந்து வெளிவரும் அவர், மனைவி கௌதமியை ஒரு வீட்டில் வேலைக்காரியாக இருப்பதைப் பார்க்கிறார்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 91



**கொ**ண்ணவாயன நெனச்சாத்தான் கும்பி எரிஞ்சுபோகுது கருவாச்சிக்கு.

யாரு பெத்த பிள்ளையோ கஞ்சில்லாத வீட்டுக்கு நீதாண்டா ராசான்னு ஈசன் இவன் தலையில எழுதிருச்சோ? கட்டைவேற காலம் வரைக்கும் காலடி நிழல்லயே கெடக்கப் போற ஒரே சொந்தம் இந்தக் கிறுக்குப் பயலாத்தான் இருப்பான் போலிருக்கு.

தான் கொலபட்டினியாக் கெடந்தாலும் அவன் கும்பாவப் பழைய கஞ்சி ஊத்தியாச்சும் நெப்பி விட்றணும். இப்படியெல்லாம் நெனச்சுக் கெடந்தவ நெஞ்சிலயும் நெருப்பு விழுது லேசு லேசா.

அவன் முன்ன மாதிரி இல்ல.

விடிஞ்சும் ஒறங்குறான்.

வெறிச்சு விட்டம் பாக்கிறான்.

கூடையில அள்ள வேண்டிய சாணியச் சட்டியில அள்ளுறான்.

அழகு சிங்கத்தத் திண்ணையில விட்டுட்டுத் தெருவுக்கு ஓடிப்போறான்.

ஒண்ணும் புடிபடல அவன் போற போக்கு.

சடையத்தேவர் வீட்டு ஆளுக செய்வினை செஞ்சிருப்பாகளோ? பாப்பம்.

பொழைக்க ஒரு புதுவழி பாக்கணுமே!

கருவாச்சி பெரிய மனுசியான அனுசுல ஆத்தா பெரியமூக்கி அவளுக்குப் பருத்திப் பால் பாயசம் வச்சுக் குடுத்திருக்கா.

அந்த மாதிரி ஆயுசுல குடிச்சதில்ல



ன்னு சொல்லிருக்காக அத ருசி கண்டவுக.

பருத்திப்பால் பாயசம் செய்யிற கம்ப சூத்திரம் தெரியும் கருவாச்சிக்கு.

பாயசம் போட்டு ஊருக்குள்ள வித்தா என்னன்னு யோசிச்சா மறுநாள் செஞ்சேபுட்டா.

அன்னக்கி ராத்திரி அரைவீச பருத்தி வெதையத் துண்டா ஊறப் போட்டா.

அரைப்படி பச்சரிசி- கொஞ்சம் உழுந்து- இத்துண்டு வெந்தயம் மூணு கலந்து மொத்தமா ஊறவச்சா.

அரைக்காப்படி பாசிப் பயறைப் போட்டு இன்னொரு ஏனத்துல தண்ணி ஊத்தி வச்சா.

ஊறவச்ச பருத்தி வெதையோட இஞ்சியும் ஏலக்காயும் கலந்து ஒரல்ல போட்டு கோழி கூப்பிடக் கொண்ணவாயன எழுப்பி ஆட்றா மகனே ஆட்றான்னா.

அவன் ஒறங்கி விழுந்திக்கிட்டே ஒரல ஆட்றான்.

சக்கைப் பதம் வரவும் அதுல தண்ணி ஊத்திப் பருத்திப்பாலப் புழிஞ்சா பாத்திரத்துல.

அப்படி மூணு ஆட்டு ஆட்டி மூணு புழி புழிஞ்சா.

ஊறப் போட்ட பச்சரிசியக் குருணப் பதத்துக்கு ஆட்டி அள்ளி வச்சுக்கிட்டா.

ரெண்டு வீச கருப்பட்டிய நுணுக்கி வச்சுக்கிட்டா.

அரைத் தேங்காய்த் துருவி வச்சுக்கிட்டா.

இப்பப் பத்துப்படி தண்ணிய ஒரு அடுப்புக் கூட்டி கொதி கொதின்னு கொதிக்க விட்டா.

ஊத்துனா அதுல பருத்திப்பால.

கிண்டிக்கிட்டே முழுப் பாசிப்பயற உள்ள அள்ளிக் கொட்னா.

அது முக்காப் பதம் வேக்காடு கண்டதும் பச்சரிசி மாவ உள்ள கொட்டிக் கலக்கோ கலக்குன்னு கலக்குனா.

கொதி பதம் வந்ததும் கருப்பட்டித் தூளை வெதச்சு தேங்காத் துருவலைத் தெளிச்சு எறக்கி வச்சா....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனத்துவேசத்தை முன்வைக்கின்ற மதச்சார்பு அமைப்புகளுக்கு தடை!

## அசாத் சாலி தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையில் இனத்துவேசத்தை முன்வைக்கும் மத மற்றும் சமய அமைப்புக்களை தடை செய்யும் வகையில் இலங்கை அர சாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றது எனவும் பிரித் தானியாவின் பொதுச் சபைக் கூட்டத்தின் போது இலங்கையின் வெளி யுறவு அமைச்சர் மங்கள சமரவீர இந்த உறுதி மொழியை அளித்துள் ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**



முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பொதுபல சேனா உள்ளிட்ட அமைப்புக்கள் செயற்பட்ட விதம் குறித்து பொதுச் சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மங்கள சமரவீர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் எனவும் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து பொதுபல சேனா வின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை தொடர்பு கொண்டு கேட்ட போது இலங்கையில் இனத்துவேசம் பேசப் படுமானால் சிறுபான்மையினர் எவ்வாறு சமாதானமாக வாழ முடியும் என பதிலுக்கு கேள்வி எழுப்பினார். அதேவேளை பொது பலசேனா அமைப்பின் மீதான குற்றச்சாட் டுக்களையும் அவர் முற்றுமுழுதாக மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம்-54

**இடம்: செட்டித்தெரு நல்லூர் Hotel Lux Etoiles இல் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.**



பழைமையினை எப்போதுமே புதுமை வென்றிடாது!
அதனால் தான் Old is Gold என்கிறார்கள்

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் :** valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
**தபால் முகவரி:** ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**அல்லது நேரில்.**

**அனுப்பியவர்:**
**எஸ். கலைச்செல்வன்**
**மிருசுவில்**

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# போலியோ தடுப்புக்கு புதிய முறைமை

(கொழும்பு)

போலியோ நோயை தடுப்பதற் காக தற்போது குழந்தைகளுக்கு வாய் மூலம் வழங்கப்படும் மரு ந்துக்கு பதிலாக, ஊசி மரு ந்து ஒன்றை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித் துள்ளது.

சுகாதார அமைச்சின் பொது சுகாதார விஞ்ஞான பிரிவு இத னைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் போலியோ தடு ப்பு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியின் கீழ் முன்னெடுக்க ப்படுகிறது.

இதன் அடிப்படையில் ஊசி மருந்து மூலம் போலியோ தடுப்பை வழங்கும் முறைமை எதிர்வரும் மே மாதம் முதல் அமுலுக்கு வர வுள்ளது என்பது குறிப்பிடத்த க்கது. (இ-5)

# குடும்ப சுகாதார அதிகாரிகளின் பிரச்சினைகள் தொடர்கின்றது

தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க சுகாதார அமை ச்சர் ராஜித சேனாரத்ன இன்னும் மத்தியஸ்தம் வகிக்கவில்லை என்று, அரச குடும்ப சுகாதார சேவை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் தொழிற்சங்க போராட் டங்களை ஆரம்பித்து 12 நாட்கள் கடந்துள்ளன.

எனினும் தங்களின் கோரிக் கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் இன்னும் முன்வ ரவில்லை என்று தெரவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் போராட்டத்தில் ஈடுப டும் தங்களின் வேதனத்தை இடை நிறுத்துவதற்கான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலா ளரால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை க்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 3 ஆம் திகதி இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நான் சுதந்திரக் கட்சிக்காரன்



அரசியலில் இருந்து சில நாட் களாக தான் ஒதுங்கி இருப்பதாக வும் தான் சிறந்த ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சிக்காரன் எனவும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய கலாபவனத் தில் கடந்த 13ஆம் திகதி நடை பெற்ற புகைப்பட கலைஞர் சங்கா வித்தானகமவின் ஊடகங்களில் வெளியான படங்களை கொண்ட முதலாவது புகைப்படக் கண்காட் சிக்கு வருகை தந்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு சென்றிருந்த ஊடகவிய லாளர்கள், மகிந்த ராஜபக்ஷவிடம் தேசிய அரசாங்கம் மற்றும் தற் போதைய அரசியல் நிலைமைகள் குறித்து வினவினர்.

தேசிய அரசாங்கம் பற்றிய யோசனைகள் இருக்கின்றதா என கூறிய முன்னாள் ஜனாதிபதி, நாம் பார்ப்போம் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

இந்த கண்காட்சியில் முன்னாள் ஜனாதிபதியுடன் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலா ளரான நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் கலந்து கொண்டார். (இ-5)

# தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த குடும்பப் பெண்ணொ ருவர் நேற்று முன்தினம் இரவு சிகி ச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

கடந்த 7 ஆம் திகதி தீக்காயங்க ளுக்குள்ளான குறித்த பெண் மந் திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சைப் பல னின்றி நேற்று இரவு 7 மணியள வில் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் துன்னாலை தெற்கு துன்னாலையைப் சேர்ந்த ராஜேஸ் வரன் ஜெயசித்ரா (வயது-32) என்ற இளம் குடும்பப் பெண் ணாவார்.

நான்கு பிள்ளைகளின் தாயான ஜெயசித்ராவின் மரணம் தொடர் பில் யாழ். போதனா வைத்திய சாலை யின் திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிரேம்குமார் விசார ணைகளை மேற்கொண்ட அதே வேளை பொலிஸாரும் விசார ணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (இ

# புதிய நிர்வாகத் தெரிவு

சில்லாலை வடக்கு சாந்தை எம்.ஜி.ஆர்.இல்லத்தில் யாழ். மாவ ட்ட அண்ணா எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் செ.அன்ரன் தலைமை யில் புதியநிர்வாக பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தலைவராக செ.கஜீபன், உப தலைவராக இ.இராஜசிறி, செய லாளராக நா.முருகானந்தம், உப செயலாளராக இ.தவராஜா, பொரு ளாளராக த.உதயசூரியன். ஆலோச கராக சி.திருச்செல்வம் மற்றும் நிர் வாக உறுப்பினர்களும் தெரிவு செய் யப்பட்டனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

(9733)

தொடர்புகளுக்கு:-
077 873 6561

வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(சி-9913)

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

# மகிந்தவை பிரதமர் சந்தித்தது தமிழருக்கு செய்த துரோகம்!

தமிழர்களை அழித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் மோடி சந்தித்தது தமிழர்களுக்கு செய்த துரோகம் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நேற்றுவெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை தமிழர்களுக்கு எதிராக ஆணவ அரசியல் நடத்திய மகிந்த ராஜபக்ஷவும், நரேந்திர மோடியும் நெருங்கிய நண்பர்களாக இருப்பதற்கு பல கருத்தொற்றுமைகள் உள்ளன. பெரும்பான்மையினரை, சிறுபான்மையினருக்கு எதிராக அணி திரட்டி ஆதரவை பெருக்குவதுதான் இவர்களது செயல்முறை திட்டம். இவர் மதத்தின் பேரால் செய்கிறார். அவர் இனத்தின் பேரால் செய்கிறார். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் உதவியாளர்கள் துணையில்லாமல் தனிமையில் சந்தித்து நீண்ட நேரம் பேசியிருக்கிறார்கள்.

அதுவும் இந்த சந்திப்பு இந்திய அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டது என செய்திகள் கூறுகின்றன.

இந்த சந்திப்புக்கு 2 நாட்களுக்கு முன்னால், ராஜபக்ஷ அளித்த பேட்டி ஒன்றில், "தமது தேர்தல் தோல்விக்கு "றோ" இந்திய உளவுத்துறைதான் முழுக்காரணம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அமைப்பு சதி செய்து, எனக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதில் வெற்றி பெற்றுள்ளது" என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

மகிந்த கூறிய குற்றச்சாட்டு மூலம் இந்தியாவின் பாதுகாப்பையே கண்காணித்து உறுதி செய்கிற உளவுத்துறையையே களங்கப்படுத்தி, இழிவுபடுத்தியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கு இதுவரை இந்தியத் தரப்பிலிருந்து எவரும் கடுமையான முறையில் மறுக்கவோ, ஆட்சேபனையோ தெரிவிக்கவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

42 ஆவது அகவையினை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



(சி-376)

திரு.தங்கராசா- ஜெகதீஸ்வரன்

16.03.2015 இன்று திங்கட்கிழமை தனது 42 ஆவது அகவையினைக் காணும் எமது கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர். திரு. தங்கராசா– ஜெகதீஸ்வரன் அவர்களை மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம். வன்னியில் இடம்பெற்ற போர்ச் சூழலில் 15 வருடங்களுக்கு மேலாக தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருக்காக அயராது உழைத்ததுடன் இன்றும் தனது சேவையினை எமக்காக ஆற்றிவரும் நிலையில் தனது 42 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தங்களை நீடூழி வாழ்கவென வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

- வாழ்த்துவோர் -

உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள்,
தனியார் பேருந்தின் உத்தரவாத வரையறுக்கப்பட்ட நிறுவனம்,
கிளிநொச்சி மாவட்டம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.இ.அந்தோனிப்பிள்ளை
SLPS-1
B.Ed



எமது பாடசாலையினுடைய அதிபர்
திரு.இ.அந்தோனிப்பிள்ளை
அவர்கள் அதிபர் சேவையில்
தரம் 1இல் பதவி உயர்வு
பெற்றதையிட்டு
மனம் மகிழ வாழ்த்துகிறோம்.

(9783)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/தேவிபுரம் அ.த.க.பாடசாலை

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. மாணிக்கம் ஆனந்தகுமார்
BA, Dip.in Edu, SLPS-I

10.03.2015 அன்று கொழும்பு
றோயல் கல்லூரியில் நடைபெற்ற
இலங்கை அதிபர் சேவை வகுப்பு–I
இற்கு பதவி உயர்வு பெற்ற அதி
பர்களுக்கான நியமனக் கடிதம்
வழங்கும் நிகழ்வில்
எமது வித்தியாலய அதிபர்

திரு. மாணிக்கம் ஆனந்தகுமார்
BA, Dip.in Edu, SLPS-I

(9792)

அவர்களும் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு–I இற்கு பதவியுயர்வு பெற்றமையை மனம் மகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை.

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ நில அளவையாளர்<br>தொ.இ: B/289 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA,MA,HNDA,PGDE/ அரச தொழில்<br>தொ.இ: G/631 |
| பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 39 செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/294 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: GAQ/ தனியார் தொழில்<br>தொ.இ: G/641 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 24 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BCS/ NGO<br>தொ.இ: B/296 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/651 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 52<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/300 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 52 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/653 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலம்

(கரணவாய்)


வடமராட்சி குடாரப்பு நாகர்கோவில் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்றுக்காலை தலை மற்றும் கை, கால்கள் அற்ற நிலையில் நாகர்கோவில் வெளிச்சவீட்டிலிருந்து 100 மீற்றர் தொலைவில் கரையொதுங்கிய இந்தச் சடலம் தொடர்பாக இராணுவத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.




இதனையடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எம். கணேசராசா நேற்று முற்பகல் 10 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இதனையடுத்து சடலத்தை ஒரு மாத காலம் வரையில் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்குமாறும் அத்துடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)



# காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்கு வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் மீண்டும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போல் இலங்கையிலும் மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி உட்பட சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டு முழுமையான அதிகாரப்பரவலாக்கல் மூலமே இலங்கை தமிழ்மக்களின் பிரச்சினைகளிற்கு நிரந்தர தீர்வினை எட்ட முடியுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் யாழ்ப்பாணத்தில் நடத்திய முக்கிய கலந்துரையாடலின் போதே வடக்கு மாகாண சபை முதலமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வடக்கு முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

'வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பு இன்றியும், அவர்களின் கருத்துக்களை உள்வாங்காமலுமே 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இனப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அனைத்து அபிலாசைகளையும் நிறைவேற்றக் கூடிய வகையில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. இவ்வாறான நடவடிக்கையொன்றின் ஊடாக மாத்திரமே இலங்கையில் நிரந்தர தீர்வை காண முடியும்' என விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்திய அரசியல் யாப்பிற்கமைய இந்தியாவிலுள்ள மாநிலங்கள் தமக்குரிய அபிவிருத்தித் திட்டங்களையும், சட்டம் ஒழுங்கையும், காணி விவகாரத்தையும் கையாள்கின்றன. ஆனால் இலங்கையில் வடக்கு மாகாண சபையான எமக்கு அவ்வாறு செயற்பட முடியாத நிலையே காணப்படுகின்றது என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக மத்திய அரசும், மாகாண சபைக்கும் நிர்வாக நடவடிக்கைகளில் பல சிக்கல்கள் எழுகின்றன. மத்திய அரசு மாகாண சபைக்கு ஆளுநர் ஒருவரை நியமித்து மாகாண சபையின் நிர்வாகத்தில் முழுமையாக தலையீடு செய்யும் நிலையே இலங்கையில் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவாரத்தை என்பது இந்திய அரசும், இலங்கை மத்திய அரசும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கிடையில் இடம்பெற வேண்டியது அவசியமானது என்றும் முதலமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-4)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுக்கான முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு நிகழ்வுகள் யாழ்.கல்வி வலய ஆரம்பப் பிரிவு விளையாட்டுசெயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி தலைமையில் நடைபெற்று முடிந்துள்ளது. இந் நிகழ்வுகளில் கோட்ட ரீதியாக பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் வலய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்விற்கு தகுதி பெற்றுள்ளன. அப்பாடசாலைகள் வருமாறு,

**கோப்பாய்க் கோட்டம்**

**தரம்- 3**

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், அச்சுவேலி புனித தெரேசா மகளிர் வித்தியாலயம்

**தரம்- 4**

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், அச்சுவேலி புனித தெரேசா மகளிர் வித்தியாலயம்,உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

**தரம்- 5**

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்,கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

**யாழ்.கோட்டம்**

**தரம்-3**

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

**தரம் -4**

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

**தரம் -5**

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

**நல்லூர்க்கோட்டம்**

**தரம்-3**

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

**தரம்-4**

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

**தரம்-5**

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை என யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவு விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி அறிவித்துள்ளார். (இ)





யாழ்.ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் தரம் 1 முதல் 4 வரையிலான மாணவர்களுக்கான ஆளுமையையும் சேமிப்புத் திறனையும் ஊக்குவிக்கும் முகமாக சிறுவர் சந்தை ஒன்று சம்பத் வங்கி சுன்னாகம் கிளையினரால் சிறு வயது முதலே ஆளுமை என்ற தொனிப் பொருளில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டிருந்தது.

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் சுமார் 200 மாணவர்கள் மாதிரிச் சந்தையினை ஏற்படுத்தி தாமும் வியாபாரிகள் போன்று வேடம் புனைந்து முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களுடன் இம்மாணவர்களின் பெற்றோரும் வியாபார நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ். சுகிர்தன் மற்றும் சம்பத் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சங்கர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். வங்கிஉத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கந்தரோடை வாழ்மக்கள் எனப் பலரினதும் ஒத்துழைப்புடன் இச்சிறுவர் சந்தையானது மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. சிறுவர்கள் சந்தையில் மரக்கறி வகைகள், உணவுப் பண்டங்கள், பனம் பொருள் உற்பத்திகள், ஐஸ்பழ வகைகள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றினைக் காட்சிப்படுத்தி சுறுசுறுப்பாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். மாணவர்களிடையே சிறு வயதிலேயே சேமிப்புப்பழக்கத்தை ஏற்படுத்துவதும் மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதும் மற்றும் சின்னஞ்சிறார்களிடையே மகிழ்வானதொரு சூழலை உருவாக்குவதுமே இச்சந்தையின் நோக்கம் என்று வங்கி அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு மனிதனாய்...

இன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் எலும்பு முறிவுப் வாட்டில் வலிகளுடனும் வடுக்களுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் 21 வயதான இளைஞன் நான் தான்.

நான் வாழ்க்கையில் செய்த தவறுதான் இன்று என் நிலைக்குக் காரணம். என் வாழ்க்கை அனுபவத்தை உங்களுடன் பகிர விரும்புகிறேன். இளைஞனே இனி இப்படி ஒருதவறை செய்யாதே நீயாவது...

'பதினெட்டு வயதானால் பரீட்சையில் (Pass) ஆகிறோமோ இல்லையோ பல்சர் பைக் (Pulsar Bike) ஒன்று இல்லையென்றால் என்ன பந்தா இருக்கு வாழ்க்கையில்'. இதுதான் இன்றைய இளைய தலைமுறையின் எண்ணம். நான் ஒன்றும் இதற்கு விதிவிலக்கானவன் அல்ல. வெளிநாட்டிலிருக்கும் என் அண்ணனிடம் அடம்பிடித்து பணம் பெற்று வாங்கி விட்டேன் ஒரு Bike.

முதலில் Bike இல் ஏறும்போது எவருக்கும் தெரிவதில்லை அது எமனின் தூதன் என்று. 'மோட்டசைக்கிள் எடுத்துட்டான் இனி எத்தனை பேர மோட்சத்துக்கு அனுப்ப போறானோ தெரியல'பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னார். கிழடு கட்டையள் இப்படித்தான் எதையும் செய்ய விடாதுகள் என்ற எண்ணம் மனதில். மிடுக்குடன் Bike ஐ என் நண்பர்களிடம் காட்டி மகிழ்ந்தேன். மின்னல் வேகத்தில் சுற்றித் திரிந்தேன் சுதந்திரப் பறவையாய்.

Bike வந்த நேரம் எனக்குக் கொழும்பில் உள்ள தனியார் கம்பனி ஒன்றில் நேர்முக தேர்வுக்கு கடிதமும் வந்தது.

Bike வாங்கி 10 நாட்கள் நாளை கொழும்பு செல்வதைப் பற்றி என் நண்பர்களுடன் கதைத்துவிட்டு இரவு 7 மணி இருக்கும் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வழியில் என்னை ஒருவர் தன்னை கூட்டிச் சென்று பிரதான வீதியில் விடும்படி கேட்டார்.

அவர் 45 வயது மதிக்கத்தக்க ஒரு குடும்பஸ்தர். அவரையும் ஏற்றிக்கொண்டுஏறத்தாழ 70km/h வேகத்தில் சென்று கொண்டிருந்தேன். பிரதான வீதி வந்தது. எதையும் கவனிக்கவில்லை. வந்த வேகத்தில் ஏதோ 100 வருடம் வாகனம்ஓடிய அனுபவம் உள்ளவன் போல் ஓட்டினேன்.

சடுதியாய் வந்ததுஉழவியந்திரம் (Tractor) ஒன்று. என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நேராகக் கொண்டு போய் மோதினேன். நான் Tractor பெட்டிக்கு அடியில். என் Bike??? என் பின்னால் இருந்தவர்???

அப்படியே இறந்துவிட்டேன் என்று நினைத்தேன். பின் சுயநினைவு வந்து எழுந்து பார்க்கும் போது வைத்தியசாலையில் Bandage இல் பொதிந்த ஒரு பொம்மை போல் இருந்தேன். நகர முற்பட்டேன் முடியவில்லை.

பொலிஸ் (Police) தான் என்னை வைத்தியசாலையில் சேர்த்ததாம். எனக்கே இந்தக் கதி என்றால் தலைக்கசவமும் இல்லாமல் என் பின்னால் இருந்த அந்தக் குடும்பஸ்தர்? பாட்டி சொன்ன வார்த்தை ஞாபகத்தில் வந்துநடுங்கவைத்ததுஎன்னை.

நான் கண்முழித்தவுடன் பார்க்க எனத் தவமிருந்த என் அம்மாவும் தங்கையும் ஓடி வந்தனர். என் நிலையைப் பார்த்து அம்மா கண்ணீர் விட்டு அழுதாள். அவள் கண்ணீரைத் துடைக்கக்கூட என் கைகளில் அன்று இயக்கமில்லை. எல்லாம் முறிவுகளும் காயங்களும்... அழாத அம்மா என்று மட்டும்தான் என்னால் கூறமுடிந்தது. ஏன் கடவுளே இப்படிச் செய்தாய் கடிந்து கொண்டேன்.

என் முற்பிறப்பில் செய்த புண்ணியமோ அல்லது தாய் தந்தை செய்த புண்ணியமோ என் பின்னால் இருந்து வந்தவருக்கு எதுவும் இல்லையாம். அவர் Tractor பெட்டியில் மேலால் பாய்ந்து விழுந்து விட்டாராம். அப்பாடா...! மனதில் பெரும் மகிழ்ச்சி.

அப்ப என்ட Bike???உன்ர முறிவைக்கூட சரிபடுத்தலாமாம்டா. ஆனா Bike இனி பழைய இரும்புக்கு தானாம்டாஎன்றான்என்நண்பன்.

மனம் உடைந்து போனேன். கவலையாய் இருந்தது. என் அண்ணனின் கடின உழைப்பை சரியாக்கி விட்டேன் என்று.

வைத்தியசாலை வீடு என நடக்க முடியாத ஒருபிணமாய் 4 மாதங்களாய் வாழ்க்கை நகர்கிறது.

கையிலும் காலிலும் என்பு முறிவு. முகம் உடம்பு எல்லாம் காயங்கள். இரண்டு அறுவைச் சிகிச்சைகள்.

இரும்புக் கம்பிகளும் பிளேற்றுகளும் கொண்டு என் என்பை நிறுத்தி வைத்துள்ளனர் வைத்தியர்கள்.

கவலைகளையும் வலிகளையும் தாங்கித் தாங்கி இப்போது உடல் மட்டுமல்ல என் மனதும் இரும்பாக மாறிவிட்டது.

என் காயங்கள் முறிவுகள் மாறி நடக்க இன்னும் 2 அல்லது 3 மாதங்களாவது எடுக்குமாம். என் வாழ்க்கை, வேலை, என் மேலிருந்த நம்பிக்கை. என் Bike எல்லாம் இல்லை என்று ஆகி விட்டது என் வாழ்க்கை கேள்விக் குறியாய் நிற்கிறது... இளைஞனே நீயாவது இனி உன் வேகத்தை குறைத்து விவேகத்துடன் நடந்து கொள். அனுபவப்பட்ட நான் கூறுகிறேன் அலட்சியப்படுத்திவிடாதே?.

**எம்.பி.கேசினி**
**கல்வியாண்டு 2010/11**
**யாழ். மருத்துவபீடம்**

## இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய ஏற்பாட்டில் கொழும்பில் கௌரவிப்பு நிகழ்வு

(கொழும்பு)

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழாவும் கௌரவிப்பு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதில் சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கலும் கௌரவிப்பும் ஏனைய ஊடகவியலாளர்களுக்கு ஊக்குவிப்பு உபகரண உதவிகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளதுடன், முருகேஷ் குழுவினரின் இசை நிகழ்வும் (கண்ணதாசனின் தத்துவப் பாடல்கள்) நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு ஊடகவியலாளர் அ.நிக்ஸன் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக அதிவணக்கத்துக்குரிய பிதா இராயப்பு ஜோசப் (ஆயர் - மன்னார் மறை மாவட்டம்) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மனோ கணேசன் (ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர்), எம்.ஏ.சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்) மற்றும் கௌரவ விருந்தினர்களாக ப.திகாம்பரம் (அமைச்சர்), சீனித்தம்பி யோகேஸ்வரன் (நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவதுடன், சிறப்பு சொற்பொழிவு பேராசியர் சபா.ஜெயராஜா, புதிய "ஊடகங்களின் வருகையும் பாரம்பரிய ஊடக்ங்களின் நிலையும்" என்னும தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-5)

## ரணிலின் ஆலோசகராக வர்த்தகர் தினேஷ் நியமனம்



ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான புதிய அரசாங்கத்தின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசகராக தினேஷ் வீரக்கொடி நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் சமாதானம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ நடவடிக்கைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் மருமகனான இவர், முன்னணி வர்த்தகர்களில் ஒருவராவார்.

கொமர்ஷல் வங்கியின் முன்னாள் தலைவரான தினேஷ் வீரக்கொடி, எசஸ் கூட்டிணைந்த நிறுவன பணிப்பாளர் சபையின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி கந்தையா விஜயலட்சுமி



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஜயலட்சுமி கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப. 12.30 மணியள்வில் Chapal Ridge Funeral Home, 8911 Woodbine Ave Markham, On L3R 5G1 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி ஞானசேகரம் ஞானேஸ்வரி



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கனடா Montealm, Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட ஞானசேகரம் ஞானேஸ்வரி கடந்த 13 ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் Brampton Crematorium & Visitation Center, 30 Bramwin Ct,Brampton,ON L6T 5A9,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சின்னையா சிதம்பரநாதன்



புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிதம்பரநாதன் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதியைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பொறளை பொது மயானத்தில் தகனம்

### மடுத்தின் செங்கோல்ராசா



நவாலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தின் செங்கோல்ராசா கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காக்கைதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### வேலுப்பிள்ளை இராசரத்தினம்



உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத்தினம் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப.10 மணியளவில் Newediuk Funeral Homes, 2058 Kipling Ave, Ontario, On M9W 4J9 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### இராசு இந்திரலிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு இந்திரலிங்கம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணியளவில் 7 Boulevard de Menilmontant, 75011 Paris (Metro Phicippe Auguste), France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயஸ்ரீயின் எதிர்காலத்தை கருதி மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

## ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை

(கொழும்பு)



அண்மையில் சிகிரியா பளிங்கு சுவரில் சேதத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள பெண்ணிற்கு சகலரும் மன்னிப்பு வழங்க வேண்டுமென பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு பொறுப்பான நிறுவனங்களுடன் சம்பவம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், குறித்த பெண்ணின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்கும் கரும்புள்ளியினை நீக்க சகலரும் மன்னிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த சின்னதம்பி உதயஸ்ரீ என்ற யுவதி தன் காதலனின் பெயரை சிகிரியா பளிங்கு சுவரில் எழுதியிருந்தார்.

இதேவேளை குறித்த பெண் தவறு செய்திருப்பதாகவும் சட்டரீதியாக அவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் சட்டம் சரியானவகையில் தான் செயற்பட்டுள்ளதாகவும் வெளியுறவு விவகார பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும் மனிதாபிமானத்துடன் பார்த்து குறித்த பெண்ணிற்கு வழங்கப்பட்ட தண்டனை காலத்தை குறைக்குமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

---

பாரதப் பிரதமர் மோடியின் பயணம்

# இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது

## மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கைத் தமிழர்களுக்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி புதிய நம்பிக்கையை கொடுத்துள்ளார். புதிய பார்வையோடு புதிய தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். நிச்சயமாக இது இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் என இந்திய மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் மோடி இலங்கை சுற்றுப் பயணத்தை முடித்து கொண்டு நாடு திரும்பி உள்ளார். அவரது சுற்றுப்பயணம் குறித்து மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

இந்திய பிரதமர் ஒருவர் 27 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கை சென்றது மட்டுமல்ல தமிழர் பகுதிக்கு சென்ற முதல் இந்திய பிரதமர் என்ற சாதனையையும் மோடி ஏற்படுத்தி உள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் அந்த நாட்டு ஜனாதிபதி பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் உரையாற்றிய பிரதமர் மோடி இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். உரிமை என்பது சட்டத்தால் கிடைப்பது. அந்தஸ்து என்பது மனதளவில் கிடைப்பது.

தமிழர்கள் பகுதிக்கு சென்ற மோடி தமிழர்கள் இந்தியாவை நம்பலாம் என்ற வாக்குறுதியையும் அளித்துள்ளார். இந்திய நிதியில் கட்டப்பட்ட 27 ஆயிரம் வீடுகளை தமிழர்களுக்கு ஒப்படைத்துள்ளார். மேலும் 47 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு நில உரிமையும், பொலிஸ் அதிகாரமும் வரும் என்பதற்கு முன்னறிவிப்பாக அமைந்துள்ளது.


இலங்கை தமிழர்களுக்கு துரோகம் செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தண்டிக்க பல வழிகள் உள்ளன. அவர் இன்று தான் தண்டிக்கப்பட்டதாக உணர்கிறார். தனது தோல்விக்கு இந்தியாதான் காரணம் என்று கூறுகிறார்.

இலங்கை தமிழர்கள் பெயரை சொல்லி அரசியல் நடத்துபவர்கள், கூக்குரலிட கூடியவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் அறிக்கையையும், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் அறிக்கையையும் படித்து தெளிவது அவசியம்.

இலங்கை தமிழர்களுக்கு பிரதமர் மோடி புதிய நம்பிக்கையை கொடுத்துள்ளார். புதிய பார்வையோடு புதிய தொடக்கத்தை ஏற்படுத்தி உள்ளார். நிச்சயமாக இது இலங்கை தமிழர்கள்வாழ்வில்ஒரு திருப்பு முனை யை ஏற்படுத்தும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

---

# கோத்தபாய சொத்து விபரங்களை வெளியிடவேண்டும்- நிதியமைச்சர்



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் சொத்துக்களை முன்வைக்குமாறு தான் சவால் விடுத்ததாகவும், ஆனால் தற்போதுவரை இது குறித்து எந்தவொரு பதிலும் இல்லை எனவும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தான் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் நடந்தவற்றை தற்போதுள்ள எதிர்க்கட்சிகளுக்கு நடைபெற இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் ஜனநாயக மீறல்களுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் ரவி கருணாநாயக்க இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த 61 நாட்களில் நாட்டிலுள்ள மக்கள் மகிழ்ச்சியாக வாழத் தேவையான வழி புதிய அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் சொத்துக்களை முன்வைக்குமாறு தான் சவால் விடுத்ததாகவும், ஆனால் இன்றுவரை இவ்விடயம் குறித்து எந்தவொரு பதிலுமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ)

---

# நான் தவறு செய்திருந்தால் என்னை நீதிமன்றுக்கு கொண்டுசெல்லுங்கள்

## மகிந்த தெரிவிப்பு

நான் எதாவது தவறு செய்திருந்தால் என்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துங்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இந்திய ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தன் சகோதரர்களையும் தன் பிள்ளைகளையும் தாக்குவதை நிறுத்தி விட்டு தவறு செய்திருந்தால தங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தன் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ சட்டரீதியாக செய்த செயல்களுக்கும் குற்றம் சுமத்துவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளராக கடமை புரிந்தவர். அதற்கமைய அனைத்து முடிவுகள் தொடர்பாகவும் கேள்வி எழுப்பப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)



பருத்தித்துறை நீதிமன்றத்திற்கான புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று இடம் பெற்றது. இதில் மாவட்ட நீதிபதி எம்.கணேச ராஜா மற்றும் சட்டத்தரணிகள் நிகழ் வில்கலந்து கொண்ட போது..

---

# 100 நாட்கள் வேலைத்திட்டத்தை அரசாங்கத்தால் 100 வீதம் வெற்றியடையச் செய்ய முடியவில்லை

(கொழும்பு)

100 நாள் வேலைதிட்டம் 100 வீதம் வெற்றிகரமாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முடியவில்லை எனவும் தற்பொழுது தேவைப்படுவது பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நோக்கி செல்வது மட்டுமே என பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் விரைவில் பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்கும் என நம்பப்பட்டது. எனினும் தற்பொழுது கிடைக்காதென தோன்றுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, ஆணைக்குழு ஸ்தாபித்தல், தேர்தல் முறையை மாற்றுதல் 100 நாள் வேலைத்திட்டத்தின் பிரதான வாக்குறுதியாக காணப்பட்டது.

எனினும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற காலம், நேரம் போதுமானதாக இல்லை எனவும் தேர்தலுக்கு செல்வதனை தவிர மாற்று கருத்து எதுவும் இல்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் பாராளுமன்றம் காலாவதியான தயாரிப்பு போன்று உள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் புதிய பாராளுமன்றம் தயாரிக்க வேண்டும் எனவும் அதனை சோபித தேரர், ரத்ன தேரர் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

---

# மகிந்தவை அரசியலுக்கு அழைத்து வந்தால் சுதந்திரக் கட்சியில் வெற்றி பெற முடியாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வந்தால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தேர்தலில் வெற்றி பெற செய்ய முடியாதென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் உள்ள சிறிய கட்சிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மனமுறிவுடன் இருக்கும் பட்சத்தில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வருவது மூலம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிர்காலம் ஒன்று உருவாக போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இம்முறை 18 இலட்ச இளைஞர்கள் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில், அவர்கள் மூலம் பெரும்பான்மை வாக்குகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கே கிடைக்கும் எனவும் சிறிய கட்சிகள் மூலம் சிறுபான்மையினருடைய வாக்குகளே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கும். இதனால் வெற்றிக்கு பாதிப்பேற்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராகுலையும் புடினையும் தேடும் நாட்டு மக்கள்

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் அரசியலுக்கு விடுமுறை எடுத்துவிட்டு ஓய்வு பெற்று வருகிறார். அவரை காங்கிரஸ்காரர்களே தேடி வரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினை கடந்த 10 நாட்களாக அந்நாட்டு மக்கள் வலைபோட்டு தேடி வருகிறார்கள்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மார்ச் 5ஆம் திகதி பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அதன்பிறகு அவரிடம் இருந்து பெரிதாக எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவும் இல்லை.

இந்த நிலையில்தான், மார்ச் 11ஆம் திகதி கசகஸ்தான் பயணத்தை புடின் இரத்து செய்துள்ளார். அப்போதுதான் அவரைப் பற்றிய ஞாபகமே மக்களுக்கு வந்தது. ஆமாம், எங்கேப்பா புடின் என்று ஒருவர் கேட்க, அதற்கு பதிலாக, அவருக்கு உடம்பு சரியில்லையோ... ஏதாவது காய்ச்சலோ, ரொம்ப முடியலையோ என பல தரப்பு பதில்கள் வந்த வண்ணம் உள்ளன.

இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில், கடைசியாக புடினின் ஜோர்ஜியா பயணமும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம் என்பது போல, ஒருவரைத் தேடினால் மற்றொருவரை இலவசமாகத் தேடிக் கொடுக்கலாம் என எங்காவது விளம்பரம் போட்டிருந்தால் அங்கு ராகுல் மற்றும் புடினின் புகைப்படங்களை கொடுத்து தேடச் செல்லலாம் என்கிறார்கள் சமூக வலையத்தளங்களில் விமர்சகர்கள். (இ-5)




# பன்றிக் காய்ச்சல் பலி எண்ணிக்கை 1674

(புதுடில்லி)

2015ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இதுவரை நாடு முழுவதும் பன்றிக்காய்ச்சலால் பலியானோர் எண்ணிக்கை 1674ஆக உயரந்துள்ளது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 29,103 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

பன்றிக் காய்ச்சல் காரணமாக, அதிகபட்சமாக குஜராத் மாநிலத்தில் 375 பேர் பலியாகியுள்ளனர். 6032 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்தபடியாக ராஜஸ்தானில் 372 பேர் உயிரிழந்துள்ளனர் 6,154 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிராவில் 277, மத்திய பிரதேசம் 230, கர்நாடகம் 71, தெலுங்கானா 69, பஞ்சாப் 51, ஹரியானாவில் 45 பேர் இந்நோயால் உயிரிழந்துள்ளனர் என அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்

# இலங்கைத் தூதுவரை அழைத்து இந்திய அரசு எச்சரிக்க வேண்டும்

**(சென்னை)**

**இந்திய கடல் எல்லைக்குள்ளே மீன் பிடித்த மீனவர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்திய சிங்களக் கடற்படையினரை இலங்கை தூதுவர் மூலம் கடுமையாக எச்சரிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

வங்கக்கடலில் கச்சதீவு அருகே இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீது சிங்களக் கடற்படையினர் கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளனர். கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கக் கூடாது என்று எச்சரித்த அவர்கள், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தமிழக மீனவர்களை விரட்டியடித்துள்ளனர்.

இதனால் அச்சமடைந்த மீனவர்கள் அங்கிருந்து புறப்பட ஆயத்தமான வேளையில் ஒரு படகில் ஏறிய சிங்களப்படையினர் அதிலிருந்த 5 மீனவர்களை இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர். தமிழக மீனவர்களின் வலைகளையும் அறுத்து கடலில் வீசி எறிந்துள்ளனர்.

சிங்களக் கடற்படையினரின் கொலைவெறித் தாக்குதலில் 5 மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். 3 மீனவர்கள் முதல் உதவிக்குப் பிறகு வீடு திரும்பி விட்ட நிலையில், கனி, கலைஞானம் ஆகிய மீனவர்கள் படு காயங்களுடன் இராமேஸ்வரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கடற்படையினரின் இந்த கொடிய தாக்குதல் கண்டிக்கத்தக்கதாகும்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை நிலவியது. ஆனால், அண்மைக்காலமாக நடைபெற்று வரும் நிகழ்வுகள் இந்த நம்பிக்கையை பொய்யாக்கி வருகின்றன. கடந்த இரு நாட்களுக்கு முன் சிங்களப் படை நடத்திய தாக்குதலில் தமிழக மீனவர்களின் படகு சேதமடைந்தது.

அதனால் ஏற்பட்ட பதற்றம் விலகும் முன் மீனவர்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளாகவே மீன் பிடித்தாலும், சிங்களப்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள்.

ஒருவேளை தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி சென்று மீன் பிடித்தாலும் அவர்களை எச்சரித்து திருப்பி அனுப்ப வேண்டியது தான் இலங்கைப்படையின் பணியாக இருக்க வேண்டும். அதைவிடுத்து தமிழக மீனவர்களை தாக்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை.

அவ்வாறு இருக்கும்போது தமிழக மீனவர்களை துப்பாக்கியால் சுட்டு மிரட்டுவதையும், இரும்புக் கம்பியால் தாக்கி காயப்படுத்துவதையும் ஏற்க முடியாது. இது 22.01.2013 அன்று டில்லியில் நடந்த இந்திய -இலங்கை கூட்டு ஆணையத்தின் எட்டாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை மீறிய செயல் ஆகும்.


கூட்டு ஆணையத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், "சர்வதேச எல்லைப் பகுதியில் மீன் பிடிப்பது தொடர்பான சம்பவங்களை குறைத்துக் கொள்ள இரு நாடுகளும் உறுதி பூண்டிருக்கின்றன. எல்லை தாண்டி மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது எக்காலத்திலும் தாக்குதல் நடத்தக் கூடாது. அனைத்து மீனவர்களையும் மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், இதையெல்லாம் மதிக்காமல் தமிழக மீனவர்களை சிங்களப்படையினர் தொடர்ந்து தாக்கி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக, இலங்கையின் அழைப்பை ஏற்று அங்குள்ள யாழ்ப்பாணத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், அங்கிருந்து சில கி.மீ. தொலைவில் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை இந்தியா மீதான தாக்குதலாகவே பார்க்க வேண்டும்.

இதற்காக இந்தியாவுக்கான இலங்கை தூதரை இந்திய அரசு அழைத்து மன்னிப்புக் கேட்க வைக்க வேண்டும். அதுமட்டுமின்றி, இனியும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என இலங்கை தூதர் மூலம் அந்நாட்டு அரசை கடுமையாக எச்சரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட 43 மீனவர்கள் காரைக்கால் வந்தனர்



இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட காரைக்கால் மற்றும் நாகை மாவட்ட மீனவர்கள் 43 பேர் நேற்று முன்தினம் மாலை காரைக்கால் மீன்பிடி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தனர்.

கடந்த மாதம் 26, 27ஆம் திகதிகளில் நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரைக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்தின் நாகை மற்றும் புதுவையின் காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் 86 பேரை இருவேறு குழுக்களாக இருவேறு இடங்களில் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர்.

அவர்களது 10 படகுகளும் சிறை பிடிக்கப்பட்டன. இந்நிலையில் இந்திய பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்தை முன்னிட்டு, கைதான மீனவர்கள் அனைவரையும் ஜனாதிபதி மைத்திரி சிறிசேனவின் உத்தரவின்படி, இலங்கை அரசு விடுவித்தது,

அவர்களில் நெடுந்தீவு அருகே பிடிபட்டு, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 43 பேர் நேற்றுக் காலை சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களில் 35 பேர் காரைக்கால் மாவட்டத்தையும், 8 பேர் நாகபட்டினத்தையும் சேர்ந்தவர்கள்.

இந்த மீனவர்களை 2 கப்பல்கள் மூலம் இந்திய கடற்படையினர் நேற்று முன்தினம் மாலை காரைக்கால் தனியார் துறைமுகத்துக்கு அழைத்து வந்து தமிழக, காரைக்கால் மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

நாடு திரும்பிய மீனவர்களை இந்திய கடலோரக் காவல்படை அதிகாரி உதல்சிங், காரைக்கால் மாவட்ட மீன்வளத் துறை இணை இயக்குநர் இளையபெருமாள், நாகை மாவட்ட மீன்வளத்துறை இணை இயக்குநர் சுப்புராஜ் உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர் மீனவர்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீதமுள்ள 43 மீனவர்கள் மார்ச 17இற்குள் காரைக்காலுக்கு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது, "படகுகளையும் விடுவித்து தங்கள் வாழ்வாதாரத்தை காக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மக்கேணி பகுதியில் குடும்பஸ்தர் மரணம்

## மரணத்தில் சந்தேகம் என்கிறார் மனைவி

(மல்லாவி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இரவு தபால் புகையிரதம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உடல் சிதறி ஸ்தலத்தில் பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் பளை-தர்மகேணி பகுதியிலுள்ள புகையிரதக் கடவையில் நடைபெற்றுள்ளது.

இதில் பளை-தர்மகேணியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான குருபரன் தவசீலன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த நபர் பளை-தர்மகேணி பகுதியிலுள்ள புகையிரதப் பாதுகாப்பு கடவையிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் புகையிரதம் மோதி உடல் சிதறி பலியாகினார்.

சம்பவம் அறிந்த பளை பொலிஸார் விசாரணை நடத்தியதுடன் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் அவரது மனைவி கருத்துத் தெரிவிக்கையில்,

வீட்டிலிருந்து எனது கணவரின் கையடக்க தொலைபேசிக்கு நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஒருவர் அழைப்பை ஏற்படுத்தி பளைக்கு வருமாறு கேட்டிருந்தார்.

உடனடியாக வீட்டிலிருந்து புறப்பட்ட எனது கணவர் நேற்று அதிகாலை வரை வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து புகையிரதம் மோதி ஒருவர் இறந்த செய்திகேட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த வேளை உடல் சிதறி பலியாகி இருப்பவர் எனது கணவர் என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் இந்த அரசு உரிய கவனமெடுத்து தீர்த்து வைக்குமாயின் எமது நாடு துரித கதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு நிகராக அபிவிருத்தி அடையும் என்பதில் எவ்வித ஐய மில்லை என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்துள்ளார். இலங்கை அரச போக்குவரத்துச் சபையினால் வன்னி மாவட்ட சாலைகளுக்கு புதிய பேருந்து வண்டிகள் கையளிக்கும் நிகழ்வு மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வடமாகாணத்தில் போக்குவரத்து தொடர்பாக இல ங்கை போக்குவரத்து சாலைக்கும் தனியார் பேருந்து சங்கங்களுக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படு கின்றன. குறிப்பாக போக்குவரத்து அட்டவணை தயாரிப்பதில் இருந்து வீதிகளில் பிரயாணிகளை ஏற்றி இறக்குவது வரை போட்டி நிலையே காணப்படுகின்றது.

பயணிகளை பேருந்தில் வைத்துக் கொண்டு போட்டி போட்டு ஓடுவது, இவ்வாறு வேகமாக ஓடும் போது இடையில் நிற்கும் பயணிகளை ஏற்றாமல் விட்டுச்செல்வது மற்றும் குறித்த தரிப்பிடங்களில் இறங்க வேண்டிய பயணிகளை இறக்காது வேறு இடத்தில் இறக்குவது போன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவ்வாறான செயல்களினால் வயோதிபர்கள், நோயாளிகள், குழந்தைகளுடன் தாய்மார் போன்றோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் சில சமயம் பாதிப்புக்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்வாறான செயல்கள் தொடரும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கையினை மேற்கொண்டு தண்டனைக்கு உட்படுத்துவதனூடாகவே இவற்றை கட்டுப்படுத்த முடியும் என்றார்.

மேலும், அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது எமது பிரதேசத்தின் அபிவிருத்தியையும் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இறுதியாக எமது தமிழ் மக்களின் உரிமைகளை இந்த அரசு உரிய கவனமெடுத்து தீர்த்து வைக்குமாயின் எமது நாடு துரித கதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு நிகராக அபிவிருத்தி அடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதன் ஊடாக எமது நாட்டை கட்டியெழுப்புவோம்என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் 5 கிராமங்களுக்கு மின்சாரம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐந்து கிராமங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கும் நிகழ்வு, மின்வலு இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதற்கமைய மணவாளன்பட்ட முறிப்பு, தட்டார்மலை, புளியங்குளம், வித்தி யாபுரம், கூழாமுறிப்பு ஆகிய கிராமங்களுக்கே மின் விநியோகம் வழங்கப்பட்டது. நிகழ்வில் உரையாற் றிய இராஜங்க அமைச்சர், ஒரு வீட்டுக்கு மின்சாரம் வழங் குவதற்கு ஒரு இலட்சதது 12 ஆயிரம் ரூபாய செலவு ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் வழங் கப்படுவதன் ஊடாக பிள்ளைகள் தங்கள் கல்வியை முறையாக கற்கலாம். கடந்த காலத்தில் போரினால் பெரும் அழிவுகளை எதிர்கொண் டுள்ள கிராமங்களுக்கே மின்சர்ரம் வழங்கப்படுகின்றது.

இப்பகுதியில் காணப்படுகின்ற குறைகளை எனக்குத் தெரியப் படுத்தினால் அக்குறைகளை எதிர் காலத்தில் இல்லாமற் செய்வதற்கான வழிகளை உருவாக்குவேன் என்றார். (அ-2)

# புதுக்குடியிருப்பில் வர்த்தக கண்காட்சி

(புதுக்குடியிருப்பு)

இலங்கை மத்திய வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம், வடமாகாண தொழில்துறைத் திணைக்களம் வங்கிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவை ஒன்றிணைந்து ஒழுங்கு செய்துள்ள மலரும் முல்லை மாபெரும் வர்த்தக கண்காட்சி-2015 எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 7 மணிவரைபுதுக்குடியிருப்பு பழைய பேருந்து நிலைய வளாகத்தில் (பொலிஸ் நிலையம் முன்பாக) இடம் பெறுமென இலங்கை மத்திய வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்துள்ளார்.


இக் கண்காட்சி நாட்டின் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே நடத்தப்படவுள்ளது.

அத்தோடு உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை பெற்று வியாபாரத்தினை அபிவிருத்தி செய்யவும் புதிய தொழில்நுட்ப வசதிகளினை அறிந்து தொழில் முயற்சி யாளர்களைவலுப்படுத்தவும் சிறந்த தொழில் சார் நடைமுறைக ளினை அறிந்து கொள்ளவும் தொழில் முயற்சியாளர்களிற்கிடையேயானவலையமைப்பை விருத்தி செய்து கொள்வதற்கான களமாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைவரையும் இக் கண்காட்சியில் பங்குபற்றி தங்கள் முயற்சிகளை மேம்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)




# தொண்டு நாத சுவாமிகள் மீனவர்களை சந்தித்தார்



மனிதநேயம் அமைப்பின் தொண்டாளர் சுவாமி தொண்டுநாத சுவாமிகள், முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் புளியமுனை மீன்பிடிக் கிராமத்திற்கு சென்றார்.

அங்கு சென்ற சுவாமி மீனவர்களுடன் கலந்துரையாடி தோடு, அவர்களோடு மீன்பிடிப் படகில் பயணித்து கடற்றொழில் செய்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் துன்ப துயரங்களை அறிந்து கொண்டதுடன், கடற்றொழில் உபகரணங்களையும் கையளித்தார்.

வன்னி யுத்தத்தில் இடம்பெற்ற கொக்குளாய் கிராமமானது மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன், யுத்தம் நிறைவடைந்த பின்பு மீனவர்கள் அநேகர் தம் தொழிலைச் சீராக செய்வதற்கு ஏற்ற உபகரணங்கள் இன்றி நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இ.போ.ச.பேருந்து சாலைகளுக்கு 15 பேருந்துகள் வழங்கப்பட்டன

(மன்னார்)

இலங்கை போக்குவரத்து சபையினால் மன்னார், வவுனியா முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் இ.போ.ச.சாலைகளுக்கென வழங்கப்பட்ட 15 பேருந்துக்களை போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.

இதில் மன்னார் சாலைக்கு 5 பேருந்துகளும் வவுனியா சாலைக்கு 8 பேருந்துகளும் வவுனியா முல்லைத்தீவு சாலைக்கு 2 பேருந்துகளுமாக மொத்தம் 15 பேருந் துகளின் சாவிகள் வைபவ ரீதியாக குறித்த டிப்போக்களிடம் வழங்கப் பட்டன.



இந்நிகழ்வில் போக்குவரத்துப் பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக், வடமாகாண கடற்றொழில் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியூதின், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஹுனைஸ் பாரூக், முத்தலிபு பாபா பார்க், வடமாகாண சபை உறுப்பினர் றிப் கான்பதியூதின், வபிராந்திய இ.போ.ச. முகாமையாளர் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு சென்றால் அழித்து விடுவார்கள்

## கோத்தபாய ராஜபக்ஷ அச்சம்



(கொழும்பு)

**எந்த அதிகாரத்தைக் கொண்டுஎன்னைக் கைது செய்யப் போவதாக அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர் என்பது எனக்குத் தெரியவில்லை. என்னிடம் அமெரிக்கக் குடியுரிமையுள்ளது. எனினும் நான் அங்கு சென்றால் நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அச்சம் வெளியிட்டுள்ளார். கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள வாராந்தப் பத்திரிகை ஒன்றுக்கு நேற்று முன்தினம் அவர் அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு அச்சம் வெளியிட்டுள்ளார்.**

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்று சில தரப்பினரும் எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். என்னைக் கைது செய்யப் போவதாக சிலர் கூறியும் வருகின்றனர்.

இதனால் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான் எந்தவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபட்டதில்லை.

எந்த அதிகாரத்தைக் கொண்டு என்னைக் கைது செய்யப் போவதாக அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர். அமெரிக்க குடியுரிமை காணப்படுகின்றது. எனினும், நான் அங்கு சென்றால் நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்னைக் கொன்று விடுவார்கள். அரசாங்கம் பழிவாங்கும் நோக்கில் துரத்தி துரத்தி துன்புறுத்தி வருகின்றது.

நான் எந்தக் காலத்திலும் அரசியல் கட்சியொன்றின் உறுப்பினராக இருந்ததில்லை. எனினும், தற்போதைய நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அரசியல் கட்சயொன்றில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டு அரசியலில் ஈடுபட நேரிடலாம் என அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவுக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கையொப்பம் சேகரித்த இடத்திற்கு இனந்தெரியாத நபர்களால் கல்வீசுத்தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம வேட்பாளராக தேர்தலில் போட்டியிட வேண்டும் என கோரி அடடன் பேருந்து தரிப்பிடத்தில் கையொப்பம் சேகரி க்கும் நிகழ்வு நேற்று இடம பெற்றது. இதன்போது அதிக மானவர்கள் கையொப்பம் இட்டனர். இந் நிலையில் மக்கள் கையொப்பம் இடும் போது இனந் தெரியாதவர்களால் கையொப்பம் இடும் இடத்திற்கு கல் எறியப் பட்டதாக முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர் கள் தெரிவித் துள்ளனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 100-120 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 | 80 | 60 | 60 |
| தக்காளி | 50 | 50 | 40 | 50 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 30 | 110 | 60 | 30 | 50 |
| கரட் | 180 | 100 | 50 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 50 | 50 | 50 | 80 | 40-60 | 60 |
| புடோல் | 50 | 40 | 50 | 80 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 80 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 | 100 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | — | 60 | 60 | 80 | 50 | 70 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 200 | 160-180 | 150 |
| பீற்றூட் | 40 | 50 | — | 80 | 50 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 80 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 160-300 | 250 | 320 | 300 | 200 | 500 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 50 | 80 | — | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 40 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 40 | 40 | 60 | 80 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 100-120 | 120 |
| வெங்காயப்பூ | 60-100 | 140 | — | 160 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 20 | 20 | 50 | 30-50 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 30 | 15 | 10 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 312


அனுசா அனு




கம்சா மோகனதாஸ்





சுஜே செல்வா




பிரவின் தாஸ்




கஜித் கெவின்



சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2015-13.04.2015



**அஷ்டமத்தில் சூரியன், திட்டமிட்டு செய்தால் வெற்றி!**

**வாய்ப்புகள் வரும்பொழுது உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லும் சிம்ம இராசி நேயர்களே!**

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சூரியன் 8 இல் மறைந்திருக்கின்றார். எனவே, யோசித்தும், இறைவனை பூஜித்தும் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆனால் அதே நேரத்தில் வெற்றி ஸ்தானத்திற்கும், தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியான சுக்ரன் செவ்வாய் வீட்டில் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான்.

இதுவரை ஸ்தம்பித்து நின்ற தொழில் இனி சீராக நடைபெறும். வரவேண்டிய தொகை வந்து கொண்டே இருக்கும். இடம் பூமியால் இலாபம் கிடைக்கும். தேங்கிய காரியங்கள் இனி சுறுசுறுப்பாக நடைபெறும். தெய்வ அனுகூலத்தால் அனைத்து காரியங்களிலும் இருந்த தடைகள் அகலும், தன்னிறைவு கிட்டும்.

புத்திர ஸ்தானாதிபதி குரு 12 இல் வக்ரம் பெற்று உச்சம் பெற்றிருக்கிறார். எனவே, பிள்ளைக்குரிய கடமைகளை செய்து முடிக்க வாய்ப்பு கைகூடி வரும். அவர்களின் திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்துவதற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். விலகி சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதோடு புதிய ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

பொருளாதார பற்றாக்குறை அகலும். அருளாளர்களின் ஆலோசனைப்படி நடக்கும் உங்களுக்கு அனுகூலமான தகவல்கள் வந்து சேரப் போகிறது. வீடு மாற்றங்கள் விரும்பியபடியே அமையும். சூரிய பலம் குறைவாக இருப்பதால் சிவாலய வழிபாட்டில் முழுமையாக கவனம் செலுத்துங்கள். யோக பலம் பெற்ற நாளில் அங்காரகனுக்கும், குருவுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தால் நற்பலன் கிட்டும். குருவின் வக்ர இயக்கம் மாறும் வரை சற்று பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. அதன்பிறகு அதிர்ஷ்ட தேவதையின் முழுமையான அரவணைப்புக்கு ஆளாக நேரிடும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள்.




**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி மேடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நற்பலன்கள் உங்களை நாடி வரப் போகிறது. சகோதர ஒத்துழைப்போடு தக்கபலன் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். பூமி யோகம் உண்டு. புதிய நண்பர்கள் சந்திப்பால் தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் பல மடங்கு விலை உயர்ந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**மீன புதனின் சஞ்சாரம்!**

தன லாபாதிபதியான புதன் மார்ச் 21ஆம் திகதி நீச்சம் பெறுகிறார். இருப்பினும் ராசிநாதனோடு அவர் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தை வழங்கும். மாமன் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பை மாற்றும். சேமிப்பை உயர்த்தும். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். பிள்ளைகளின் கல்வி நலனை கருதியும், கடல் தாண்டும் முயற்சிக்காகவும் செய்த காரியங்களில் அனுகூலம் கிடைக்கும்.

ஏப்ரல் 6 ஆம் திகதி மேட புதனின் சஞ்சாரத்தால் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். பெரிய மனிதர்களின் தொடர்பால் உரிய இலாபத்தை விரைவில் பெற்றுக் கொள்வீர்கள்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இக்காலம் ஒரு பொற்காலமாகும். ஏப்ரல் 7ஆம் திகதி முதல் இதயம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பெண்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பதவிகளால் பெருமை காண்பீர்கள். வரன்கள் வாயில் தேடி வந்துசேரும். இம்மாதம் கந்தன் வழிபாடு கனவுகளை நனவாக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ளும் மாதமிது. வருமானம் திருப்தி தரும். வாரிசுகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். கூடப் பிறந்தவர்களை அனுசரித்து செல்வது நல்லது. இடம், பூமி, விற்பனையில் இலாபம் கிடைக்கும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் ஏப்ரல் முதல் வாரத்திலேயே நடை பெறும். வாகன மாற்றம் செய்வது நல்லது. வழிபாட்டால் வளர்ச்சியை கூட்டிக் கொள்ளலாம். வராஹி வழிபாடும், அனுமன் வழிபாடும் தடைகளை அகற்றும்.

## அஷ்டமத்தில் சூரியன், திட்டமிட்டு செய்தால் வெற்றி!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**




**மகிழ்ச்சியில் திளைக்கும் மாதம் இதுவே!**

**அமைதியாக இருந்துகொண்டே அரிய பணி பலவும் செய்யும் கன்னி இராசி நேயர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியில் ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே, சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல சப்தம ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி செவ்வாயும் 12 இற்கு அதிபதி குருவும் இணைந்து விபரீத ராஜ யோகத்தை உருவாக்குகிறார்கள்.

குருவின் பரிபூரண பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாக பூர்த்தியாகும். இலைமறை காயாக இருந்த சில பிரச்சினைகள் இப்பொழுது விஸ்வரூபம் எடுத்து மீண்டும் நல்ல முடிவிற்கு வரும். அரசியல் மற்றும் பொது நலத்திலிருப்பவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பொறுப்புகள் வந்து சேரும்.

குரு வக்ரம் பெற்றிருப்பதால் அதன் பார்வை பலம் கைகொடுக்கிறது. உங்கள் ராசியைப் பொறுத்தவரை குரு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் என்பதால் வக்ர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். சொத்துக்களால் ஆதாயம், சொந்த பந்தங்களால் நன்மை, முத்தான வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக திகழும் வாய்ப்பு, முயற்சித்த காரியங்களில் எல்லாம் வெற்றி என்ற அடிப்படையில் ஒவ்வொன்றையும் குரு நடத்தி வைப்பார்.

எனவே, அதற்குப் பரிகாரமாக குரு வழிபாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். வியாழக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவாலயத்திற்கு சென்று குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. குரு பீடமாக விளங்கும் சிறப்பு ஸ்தலங்களுக்கும் யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வரலாம். ஆலமர் செல்வனை அன்போடு வழிபட்டால் நாளும் பொழுதும் நல்லதே நடக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டு தொழிலில் வெற்றிநடை போடும் வாய்ப்பு உண்டு.

மாதக் கடைசியில் மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. வீடு மாற்றங்களால் ஒரு சிலர் விரும்பிய பலனை அடைவர். நாடு மாற்றங்களால் நன்மைகளைப் பெறுவர். பணியாளர்களை மாற்றம் செய்து பணியிலிருந்து தொய்வை அகற்றிக் கொள்ளும் பொழுது முன்னெச்சரிக்கை உங்களுக்குத் தேவை. உத்திர நட்சத்திரமன்று முருகப்பெருமான் வழிபாடு உன்னத வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.




**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 21ஆம் திகதி மேட ராசியில செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது. உடன்பிறப்புகளை நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தைக் குறிப்பிட்டபடி அடைய முடியும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 21ஆம் திகதி மீனத்திலும் புதன் நீச்சம் பெறுகிறார். எனவே, ஆரோக்கியத்திற்காக செலவிடும் சூழநிலை உருவாகும். நோயை முற்றவிடாமல் ஆரம்பத்திலேயே கவனித்துக் கொள்வது நல்லது. தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயறபடுவதன் மூலம் முன்னேற்றத்தை வரவழைத்துக்கொள்ள இயலும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வது நல்லது.

ஏப்ரல் 6ஆம் திகதி மேடத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைக் கொடுக்கும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2, 9இற்கு அதிபதியான சுக்ரன் 9ஆம் இடத்தில் ஏப்ரல் 7ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு யோக காலமாகும். எதிர்பாராத விதத்தில் வரவுகள் வந்து கொண்டேயிருக்கும். பெண்களால் பெருமை சேரும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இம்மாதம் சக்தி வழிபாடு உங்கள் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**


இம்மாதம் குடும்பச் செலவுகள் கூடினாலும் அதை எளிதில் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் உங்களுக்கு எதிராகச் செயல்படுவது கண்டு அதற்கேற்றாற் போல் நீங்களும் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வருமானம் போதுமானதாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கல்விக்காக வைத்திருந்த சேமிப்பு கரைந்து போனாலும் மற்றவர்கள் கைகொடுத்து உதவுவர். வேலன் வழிபாடு வெற்றியை வழங்கும்.

(தொடரும்)

## மகிழ்ச்சியில் திளைக்கும் மாதம் இதுவே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவி விலகக் கூடும் பிரான்சிஸ் சமிக்ஞை



போப் பதவியிலிருந்து தான் விலகக் கூடும் எனும் சமிக்ஞையை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார். தனக்கு முன்னர் பதவியில் இருந்த போப் பெனடிக் போலவே தானும் பதவி விலகக் கூடும் என்று சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராக அதாவது போப்பாக அவர் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலேயே, மெக்ஸிகோ நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே இந்தச் சமிக்ஞையை அவர் வெளியிட்டார்.

போப்பாக இரண்டு வருடங்கள் பொறுப்பில் இருக்கும்தான் நீண்ட காலத்துக்கு அதில் தொடருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை குறிப்புணர்த்தியுள்ளார். ஆண்டவர் தன்னை வத்திகானுக்கு சிறிய காலத்துகே அனுப்பியுள்ளார் என்று தான் கருதுவதாகவும் அதன் காரணமாகவே ஒரேயொரு பெட்டியுடன் தான் ரோமுக்கு வந்துள்ளதாகவும் அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்தார்.

நான்கு அல்லது ஐந்து வருடங்கள் அல்லது குறைவான காலப் பகுதியே தான் போப்பாக இருக்கக் கூடும் என பிரான்சிஸ், தனக்கு முன்னர் போப்பாக இருந்த பெனடிக்ட் பதவி விலகியது மிகவும் தைரியமான ஒரு செயல் என்று புகழ்ந்துரைத்தார்.

பெனடிக்ட் போப் பதவியிலிருந்து விலகியது ஒரு தனிப்பட்ட சம்பவமாகப் பார்க்கக்கூடாது என்று அதை ஒரு பெரிய சீர்த்திருத்த முயற்சியாகவே பார்க்க வேண்டும் என்றும் போப் பிரான்சிஸ் கூறுகிறார்.

அவ்வகையில் கத்தோலிக்கத் திருச்சபை எனும் மாபெரும் ஒரு நிறுவனத்தில் புதிய வழியொன்று திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அப்பேட்டியில் கூறினார்.

முன்னரும் கூட போப் பொறுப்பிலிருந்து தான் ஓய்வு பெறக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகளை அவர் வெளியிட்டிருந்தார்.

எனினும் கத்தோலிக்கத் திருச்சபையில் பொறுப்புகளில் இருப்பதற்கு வயது வரம்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்கிற எண்ணத்தை தான் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். போப் பதவியில் ஒருவர் 80 வயது வரை இருந்தால் அவர் இயலாதவர், அவரால் ஒன்றும் காத்திரமாகச் செய்ய முடியாது எனும் எண்ணம் ஏற்படக் கூடும் எனவும் போப் பிரான்சிஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி போப்பாக பதவியேற்ற பிரான்சிஸ் எளிமையாக வாழ்க்கை மேற்கொண்டுள்ளார் என புகழாரங்கள் சூட்டப்படுகின்றன. அதேவேளை அந்தத் திருச்சபையின் உள்ளக நிர்வாக அமைப்பைச் சீர்திருத்தம் செய்யவும் அவர் உறுதிகளை வழங்கியுள்ளார். தனது கருத்துக்கள் ஒரு எண்ணமே என்று கூறியுள்ள அவர் அதுவே முடிவல்ல என்றும் வலியுறுத்தியுள்ளார்.

போப்பாக இருப்பது குறித்து மகிழ்ச்சி என்றாலும், முகம் தெரியாமல் ஒரு பாதிரியாராக மக்கள் சேவை செய்துவந்த வாய்ப்பை தான் இழந்துள்ளதாகவும் மெக்ஸிகோவின் டெலிவிசியா தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அளித்த அந்தப் பேட்டியில் போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

யாரும் அறியா வண்ணம் ஒரு நாள் ரோமிலிருந்து வெளியேறி ஒரு சாப்பாட்டுக் கடையில் சென்று பீட்சா சாப்பிட வேண்டும் என்பதே தனக்கு இப்போது இருக்கும் ஒரே ஆவல் எனவும அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# கடும் புயலால் மக்கள் பரிதவிப்பு!



அவுஸ்திரேலியா அருகே பசுபிக் கடலில் வனுவாட்டு என்ற தீவு நாடு உள்ளது. இங்கு நேற்று முன்தினம் கடுமையான புயல் தாக்கியது. இதனால் அங்கு மணிக்கு 270 கி.மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது. காற்றுடன் பலத்த மழையும் கொட்டியது. அதைத் தொடர்ந்து புயல் காற்று தாக்கமும் அதிகம் இருந்ததால் மரங்கள் சாய்ந்தன. ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்தன.

தலைநகர் போர்ட்வில்லாவில் 90 சதவீதம் வீடுகள் இடிந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பலபகுதிகளில் கிராமங்கள் முற்றிலும் அழிந்தன. அவை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. புயல் மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 8 பேர் பலியாகியுள்ளனர். இன்னும் பலர் உயிரிழந்து இருக்கலாம் என அஞ்சப்படுவதால் பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.

வீடுகளை இழந்த மக்கள் 20 மையங்களில் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு இடநெருக்கடி அதிகரித்துள்ளதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். தலைநகர் போர்ட்வில்லாவில் உள்ள விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. மீட்பு பணியில் ஐ.நா. பேரிடர் உதவிகுழு ஈடுபட்டுள்ளது.

அண்டை நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவையும் மீட்பு குழுக்களை அனுப்பியுள்ளன. நிதி உதவியையும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளன. ஐரோப்பிய யூனியனும், இங்கிலாந்து நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளன. புயல் மழைக்கு 8 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்ட நிலையில் 44 பேர் இறந்ததாக அதிகார பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# பேருந்து விபத்தில் 32 பேர் உயிரிழப்பு



**பிரேசில் நாட்டில் 1300 அடி பள்ளத்திற்குள் பயணிகள் பேருந்து விழுந்து விபத்தில் சிக்கியதில் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தெற்கு பிரேசிலில் சுற்றுலா பேருந்து ஒன்று நேற்று முன்தினம் பள்ளத்திற்குள் விழுந்து விபத்தில் சிக்கியதில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் சாண்டா காட்ரீனா மாநிலம் ஜாயின்வி ல்லே சிட்டியில் சுற்றுலா பேருந்து ஆயிரத்து 300 அடி பள்ளத்திற்குள் விழுந்தது. விபத்துக்குள் சிக்கிய பேருந்தில் 50 பேர் இருந்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும், பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து அங்கு மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. பேருந்து விபத்துக்குள் சிக்கியதற்கான காரணம் தெரியவரவில்லை. இருப்பினும், பேருந்துச் சாரதி கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் விழுந்தது என்று பிரேசில் நாட்டு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. பேருந்து மரங்கள் அடர்த்தியாக இருக்கும் பகுதியில் இரவு விழுந்துள்ளது. இதனால் மீட்பு பணிகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து விபத்துக்குள் சிக்கிய மலைப் பகுதி அந்நாட்டில் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகும். மீட்பு பணி நடைபெறும் இடத்திற்கு ஹெலிகொப்டர்களும் அனுப்பப்பட்டுள்ளன. விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர். காயம் அடைந்த 12 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பேருந்து விபத்துக்குள் சிக்கிய பகுதியில் தேடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேரிடர்களைத் தடுப்பது ஒவ்வொருவரின் கடமை

## பான் கீ மூன் வலியுறுத்து



பேரிடரை தடுப்பது ஒவ்வொருவரின் கடமை என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

பேரிடர் ஆபத்துகளை தடுப்பது தொடர்பான ஐ.நா. சர்வதேச மாநாடு, ஜப்பான் நாட்டின் சென்டாய் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இம்மாநாட்டில் கடல் நீர்மட்டம் உயர்வு மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் இயற்கை சீற்றங்கள் குறித்து பசுபிக் தீவு நாடுகளின் தலைவர்கள் தங்கள் கவலையை பகிர்ந்து கொண்டனர்.

பசுபிக் தீவு நாடுகளில் ஒன்றான வனுவாட்டுவின் ஜனாதிபதி பால்டுவின் லான்ஸ்டேல் பேசும்போது, சக்தி வாய்ந்த புயலால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் நாட்டுக்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும். பருவநிலை மாற்றம், கனமழை, சூறாவளி போன்ற பேரிடர்களை தற்போது அதிகம் எதிர்கொள்கிறோம் என்றார்.

மைக்ரோனேசியா தீவுகளின் ஜனாதிபதி இம்மானுவேல் மோரி பேசும்போது, "எங்கள் நிலப்பகுதி சிறு சிறு பகுதிகளாக இருப்பதும், மக்கள் ஆங்காங்கே பிரிந்து வாழ்வதும் மிகப்பெரிய பாதகமாகவுள்ளது. பருவநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் கரியமில வாயு வெளியேற்றத்தை தடுக்க உலக நாடுகள் விரைந்து செயற்படவேண்டும்" என்றார்.

மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் பேசும்போது, பேரிடர் ஆபத்துகளை தடுப்பது ஒவ்வொருவரின் கடமை. பருவநிலை ஏற்படுத்தும் பேரிடர்களில் இருந்து காத்துக்கொள்ள சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் கூடுதல் உதவிகளும் அவசியம். பசுபிக் தீவுகளுக்கு பேரிடர் மீட்புக் குழுக்களை அனுப்புவ [illegible] மேலும் தெரிவித்தார். (இ-5)

# 41 நீதிபதிகளின் பதவியை பறித்து எகிப்து அரசாங்கம் நடவடிக்கை

எகிப்தில் ஆட்சியில் இருக்கும் அல்-சிசி அரசாங்கம் 41 நீதிபதிகளின் பதவியை பறித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் எகிப்து ஜனாதிபதி முகமத் மோர்சி அரசு மக்கள் போராட்டம் மூலம் தூக்கியெறியப்பட்டது. பின்பு நடந்த தேர்தல் மூலம் ஜனாதிபதியாகியிருக்கும் முன்னாள் இராணுவ தளபதி அல்-சிசி அரசு தனக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக சகோதரத்துவ அமைப்பின் தலைவர்கள் மற்றும் அதன் ஆதரவாளர்களை கைது செய்து வருகிறது.


இந்நிலையில் அரசால் தடை செய்யப்பட்ட இயக்கமான சகோதரத்துவ அமைப்புக்கு ஆதரவு அளித்ததாக 31 நீதிபதிகளுக்கு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மோர்சி ஆட்சியில் இருந்தபோது அவருக்கு எதிராக போராட்டங்களை நடத்திய சகோதரத்துவ அமைப்புக்கு ஆதரவு அளித்ததற்காக மேலும் 10 நீதிபதிகள் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

எகிப்தின் சட்டப்படி நீதிபதிகள் அரசியல் அமைப்புகள் மற்றும் மனிதவுரிமை அமைப்புகளில் சேர்ந்து பணியாற்றுவதற்கு தடை உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறும் இந்திய ரோலர்கள்; அல்லாடும் வடக்கு மீனவர்கள்!



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னிறுத்திய மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் 100 நாட்களின் பின்னர் அதாவது, ஏப்ரல் 19, 1995 அன்று அதிகாலை விடுதலைப் புலிகளினால் முறிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்படைத தளத்தில் தரித்து நின்ற "ரணசுரு, சூரையா" என்கிற இரண்டு கடற்படைக் கலன்களை கடற்கரும் புலித் தாக்குதலின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியழித்தனர். அதுதான், ஈழப் போராட்டத்தின் மூன்றாவது கட்டத்துக்கான ஆரம்பம்.

அன்றைய தினம், வடக்கு- கிழக்கின் பல பகுதிகளிலும், அதாவது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் மிகவும் உணர்வு எழுச்சியோடு அன்னை பூபதி நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. (அன்னை பூபதி, இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக கிழக்கில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தவர்.)

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிக்கப்பட்டுவிட்டது என்ற தகவல் அவ்வளவாக பரவியிராத நிலையில் அன்று மாலை யாழ்ப்பாணத்தின் கடற்கரைக் கிராமங்களில் ஒன்றான தாளையடியிலிருந்து ஆழ்கடல் மீன்பிடிக்காகச் சென்ற இருவர் அன்றைய தினம் இரவு வடமராட்சிக் கிழக்கு கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தனி ஈழத்துக்கான போராட்டங்கள் ஆயுத வடிவம் பெற்ற பின்னர் வடக்கு கடற்பரப்பு என்பது மிகவும் அச்சுறுத்தலான பகுதியாக மாறியது. வடக்கில் மீன்பிடியை பிரதானமாக கொண்ட 30 சதவீதமான மக்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முழுமையாக முன்னெடுக்க முடியாமல் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தவிர்த்தனர். ஆழ்கடல் மீன்பிடி என்பது அவர்களின் வாழ்க்கையிலிருந்து முற்றுமுழு தாக பறிக்கப்பட்டது. அதையும் மீறி ஆழ்கடல் மீன்பிடிக்காகச் சென்றவர்களில் பலர் துப்பாக்கிகளினால் பலிவாங்கப்பட்டார்கள். அவர்களின் உடலங்கள் வடக்கு கடற்கரைகளில் கரையொதுங்கியிருந்தன.

வடக்கில் ஆழ்கடல் மீன்பிடி 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே முற்றுமுழுதாக இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டது. 1995 ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தை காலத்திலும், 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும், ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தின் தொடர்ச்சியாக 2006 வரையான காலப்பகுதியிலும் வடக்கு மீனவர்கள் பகுதியளவான ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதிக்கப்பட்டனர். 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இறுதி மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான காலப்பகுதியிலேயே ஆழ்கடல் மீன்பிடிக்கான தடை வடக்கில் முழுவதுமாக நீக்கப்பட்டது.

வடக்கில் ஆழ்கடல் மீன்பிடிக்கான தடை இலங்கை அரசினால் விதிக்கப்பட்டிருந்த காலத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அந்தக் கடற்பரப்புக்குள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதுபோல, இந்திய (தமிழக- ஆந்திர) மீனவர்களும் அந்தக் கடற்பரப்புக்குள் மீன்பிடி நடவடிக்கைகளை அத்துமீறி மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த நிலையில், மீண்டும் வடக்கு மீனவர்கள் தமது ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பித்த போது பெரும் பிரச்சினைகளை தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்களினால் எதிர்கொண்டனர். தமது பாரம்பரியமான கடற்பரப்பில் எந்தவித நியாயத் தன்மைகளுமின்றி வெளியவர்கள் அத்துமீறுவதால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக முடக்கும் அளவுக்கு மாறியிருந்தது.

வடக்கு கடற்பரப்பினை மீன்களின் சுரங்கம் என்பார்கள். பாக்கு நீரிணையும், அதனால் அந்தப் பகுதியில் காணப்படும் கடல் வளங்களின் பெருக்கமும் மீன் விருத்திக்கு காரணமாக இருக்கின்றன. அதுதான், வெளியவர்களை அந்தப் பகுதிக்குள் தொடர்ந்தும் அத்துமீற வைத்திருக்கின்றது.

குறிப்பாக, இந்திய (தமிழக) மீனவர்களுக்கும், வடக்கு மீனவர்களுக்கும் இடையில் உறவுமுறையில் தொடர்புகள் சில இருந்தாலும், தொழில்முறையில் பெரும் வைரிகளாகவே தம்மைக் கருதிக் கொண்டிருக்கின்றனர். அது, தனி ஈழத்துக்கான போராட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னராக காலப்பகுதியிலும்கூட. அதுதான், இன்றைக்கும் எந்தவித முடிவுகளும் இன்றித் தொடர்கின்றன.

வடக்கிலுள்ள மீனவர்கள் தமது பாரம்பரிய கடற்பகுதியின் வளத்தினைப் பாதுகாப்பது தொடர்பில் காலம் காலமாக மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகின்றார்கள். பாரிய மடிகளைப் பயன்படுத்தி தொழில் செய்யும் ஆழ்கடல் இழுவைப்படகு முறை, இலை குழைகளைப் பயன்படுத்தி ஆழம் குறைந்த கடற்பரப்பில் கணவாய், இறால்களைப் பிடிக்கும் முறை, (பொருத்தமற்ற) தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறை உள்ளிட்ட பல முறையற்ற மீன்பிடி முறைகளை தடை செய்திருக்கின்றார்கள். வடக்கு மீனவர்கள் தாமாகவே முன் வந்து தடைசெய்துள்ள (இலங்கை அரசும் ஒத்துழைத்திருக்கின்றது) இந்த முறைகளினால் அதிகளவான மீன்களைப் பிடிக்க முடியும். ஆனால், அந்த முறைகள், கடற்பாறைகள், கடற்பாசிகள், பிளாந்தன்கள் உள்ளிட்ட மீன் விருத்திக்கு அவசியமான வளங்களை அழித்துவிடும்.

அப்படியான நிலையில், ஆழ்கடல் இழுவைப்படகு முறையை பிரதானமாக கொண்டிருக்கின்ற இந்திய ரோலர்கள் இலங்கையின் வடக்கு கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதை எந்தவித காரணங்களுக்காகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த நடவடிக்கைகளை வடக்கு மீனவர்கள் தமது எதிர்காலத்துக்கான பாரிய அச்சுறுத்தலாக காண்கின்றார்கள். இலங்கையில் மோதல்கள் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் இந்திய ரோலர்களை ஆயிரக்கணக்கில் வடக்கு கடற்பரப்புக்குள் காண முடியும். இன்றைக்கும் அது நூற்றுக்கணக்கில் தொடர்கின்றது.

தமது பாரம்பரிய கடற்பரப்பினை அத்துமீறுவது என்பது இலங்கையின் வடக்கு மீனவர்களினால் அதிகமாக செய்யப்படுவது அல்ல. ஆனால், இந்திய மீனவர்களின் அத்துமீறல் திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்படுவது. கடல் நீரோட்டம், சீரற்ற வானிலை, படகுகள் பழுதடைதல் உள்ளிட்ட காரணங்களினால் மீனவர்கள் எல்லை மீறுவது என்பது தற்செயலானது. அதனை, திட்டமிட்ட எல்லை மீறுதலாக கொள்ள முடியாது. ஆனால், தொழில் நடவடிக்கைகளை பிரதானமாகக் கொண்டு எல்லை மீறுதல் என்பது பாரிய குற்றமாகவே கருதப்பட வேண்டியது.

அண்மையில்கூட வடமராட்சிக் கிழக்கின் கடற்பரப்பில் வைத்து கட்டைக்காடு மீனவர்கள் பலர் இந்திய மீனவர்களினால் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான அத்துமறல்களை தொப்புள் கொடி உறவுகள் என்கிற ரீதியில் பொறுத்துக் கொள்ளுமாறு தமிழக மக்கள் எதிர்பார்ப்பது எந்தவித அடிப்படைகளும் அற்றது. இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள் தமது கடற்பரப்பிலுள்ள வளங்களை முறையற்ற மீன்பிடி முறைகளின் மூலம் ஏறக்குறைய முற்றாக அழித்துவிட்டார்கள். அப்படியான நிலையில், எமது எல்லைக்குள் எல்லை மீறுகின்றனர். இது, பெரும் கட்டப்பஞ்சாயத்து முறைக்கு ஒப்பானது.

50 ஆண்டுகளையும் தாண்டி நீளும் இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினை என்பது இப்போது பெரும் அரசியல். அது, தமிழக, இந்திய, இலங்கை அரசியல் சூழலில் பெரும் தாக்கம் செலுத்தி வருவது. அப்படியான நிலையில், இந்தப் பிரச்சினைகளை முன்னிறுத்திய பேச்சுவார்த்தைகள் எந்தவித முடிவுகளும் இன்றி இன்னமும் தொடர்கின்றன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்திலும் சில தடவைகள் இந்திய- இலங்கை மீனவர்கள் தரப்புக்களுக் கிடையிலான பேச்சுவார்த்தைகள் டில்லி, தமிழகம், நீர்கொழும்பு என்று நீடித்து வந்தன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் பதவியேற்றதும் நடைபெறவிருந்த பேச்சுக்கள சில காரணங்களுக்கான ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இந்திய- இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளை விரைவில் முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டியது. அதற்கு தமிழக அரசாங்கம் ஒத்துழைக்கவில்லை. மாறாக, இரு நாட்டு மீனவர்களும் எல்லை தாண்டும் குற்றங்களுக்காக தொடர்ச்சியாக கைது செய்யப்படுகின்றார்கள். குறிப்பாக, எல்லை தாண்டும் குற்றங்களுக்காக கைது செய்யப்படுபவர்களில் இந்திய மீனவர்களே அதிகம். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் அவ்வப்போது இலங்கை அரசாங்கம் விடுத்து வந்தாலும், அவர்களின் படகுகளும், தொழில் உபகரணங்களும் மீளளிக்கப்படுவது ஒப்பீட்டளவில் குறைவு.

இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்கான பேச்சுவார்த்தைகள் கடும்போக்குடன் நடத்தப்படாமல் மனிதாபிமான ரீதியிலான கருத்தியலுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழக மீனவர் தரப்புக்கள் எதிர்பார்க்கின்றன. வடக்கு மீனவர்களும் அதனை முற்றாக எதிர்க்கவில்லை. மாறாக, தமது வளத்தினை- கடற்பரப்பினை பாதுகாப்பது தொடர்பில் பெரும் அக்கறையோடு அணுகுகின்றார்கள். அதனை, விட்டுக் கொடுக்க வடக்கு மீனவர்கள் தயாராக இல்லை. தமது உரிமையை- வளத்தினைக காப்பது மனிதாபிமானத்துக்கு விரோதமானது அல்ல.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தமிழக தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியில் "இந்திய மீனவர்கள் எல்லை மீறினால் சுடப்படுவார்கள்" என்ற தொனியில் வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தது. அது தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ரணில் விக்ரமசிங்கவிடம் நேரடியாகவே கேள்வி எழுப்பியதாக தெரிகின்றது. "எல்லை தாண்டும் மீனவர் களை சுடுவதற்கான அதிகாரம் எமக்கு இருக்கின்றது. ஆனாலும், இந்தப் பிரச்சினையை மனிதாபிமான நோக்கோடு அணுகுவதற்கு எதிர்பார்க்கின்றோம்" என்று இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருக்கின்றது.

வடக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் ஓரளவுக்கு குறைந்திருக்கின்ற நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல் மாத்திரம் தொடர்கின்றது. இதில், இன்னொரு விடயமும் சுட்டிக்காட்டப்பட வேண்டியது. அதாவது, எல்லை மீறும் இந்திய (தமிழக) மீனவர்களின் ரோலர்களில் அதிகமானவை தமிழக அரசியல்வாதிகளுக்கு சொந்தமானது என்றும், அவை பாரிய நிறுவனங்களின் கீழ் இயங்குவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்திய மீனவர்களின் நடுத்தரப் படகுகள் எல்லை தாண்டுவது குறைவு. இது மீனவர் சமூகங்களின் பிரச்சினை என்று முன்னிறுத்தப்பட்டாலும், அதனைத் தாண்டிய பாரிய நிறுவனங்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளின் நீட்சியாகவும் கருதப்படுகின்றது. ஆக, அவற்றின் அடிப்படைகள்- உண்மைகள் அறிந்து இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினை அணுகப்பட வேண்டும்.

வடக்கு கடற்பரப்பில் தொழில் நடவடிக்கைகளுக்கான நாட்களைப் பங்கிடுதலோ, அத்துமீறலை அனுமதிப்பதோ என்றைக்கும் தீர்வாக அமையாது. அது, இரண்டு தசாப்த காலமாக தமது பாரம்பரிய தொழிலை முன்னெடுப்பது தடுக்கப்பட்ட சமூகத்துக்கு மீண்டும் இழைக்கப்படும் பாரிய அநீதியாக அமையும். அதுபோக, தமது வளத்தினை காத்து நிற்கும் சமூகத்தினை சுரண்ட அனுமதிப்பதற்கும் ஒப்பானது. மிகவும் நேர்த்தியான திட்டங்களுடன் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டுதலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளோடு பிரச்சினை பேச்சுவார்த்தைகளினூடு தீர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால், இலங்கையின் மீன் சுரங்கமும் சூறையாடப்பட்டு வடக்கு மீனவர்கள் நடுக்கடலில் நாதியற்று நிற்பார்கள்!

-தமிழ்மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்லாந்து தூதுவராக சேனுகாவை நியமித்தமைக்கு ஜே.வி.பி.எதிர்ப்பு

(கொழும்பு)

தாய்லாந்து தூதுவராக சேனுகா செனவிரட்னவை நியமித்தமைக்கு ஜே.வி.பி. கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. சேனுகாவை இராஜதந்திர பதவியில் அமர்த்தியமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது தெரிவித்துள்ளார். சேனுகா மீது பாரியளவில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெனீவா தூதரகத்தின் புனரமைப்பு பணிகளின் போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. இந்த விசாரணைகள் பூர்த்தியானதன் பின்னர் பதவி வழங்கியிருக்கலாம்.

முன்னாள் வெளிவிவகார கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுடன் இணைந்து மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தி அதன் பின்னர் பதவிகளை வழங்கினால் அதில் தவறில்லை.

எனினும் பாரிய குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கு எவ்வித விசாரணையும் இன்றி இவ்வாறு பதவி வழங்கியது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 8 பேருக்கு திடீர் இடமாற்றம்

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 8 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேவை காரணமாக இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

திருகோணமலை, நாரஹேன்பிட்டி, வெள்ளவத்தை, வெல்லம்பிட்டிய, ராகம, பொதுஹெர, களனி மற்றும் கேகாலை ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## வட்டி வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்களுக்கான வட்டி வீதம் தொடர்பான புதிய நடைமுறை ஒன்றை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, 60 வயதை அண்மித்த சகல இலங்கை பிரஜைகளுக்கும், கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு மில்லியன் ரூபா நிலையியல் வைப்புக்காக கூடிய வட்டியை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வைப்புக்காக, வருடாந்தம் 15 சதவீத வட்டி கிடைக்க பெறும் அதேவேளை, சிரேஷ்ட பிரஜைகள் வைப்பு செய்த 2.5 மில்லியன் ரூபாய்களுக்காக 12 சதவீத வருடாந்த வட்டி கிடைக்க பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட முறைமைகள் இரத்து செய்யப்படுவதாக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு அறிவித்துள்ளது. (இ-5)

### ஐ.நா.கூட்டத் தொடரில்

## மகிந்த அரசாங்கத்தின் மீது அடுக்கப்பட்ட குற்றச்சாட்டு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் முஸ்லிம்களை அடக்குவதற்காகவும் அவர்களது பொருளாதார மையங்களை இலக்கு வைத்து அவற்றை அழிப்பதற்காகவும் பொதுபல சேனாவை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயன்படுத்தியது. பொதுபல சேனா போன்ற பேரினவாத இயக்கங்களினால் இலங்கை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இருந்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல்வருமான சட்ட முதுமாணி எம். நிஸாம் காரியப்பர் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் குற்றஞ்சாட்டியுள்ளார்.



ஜெனீவாவில் இடம்பெறுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது வருடாந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மத சுதந்திரத்திற்கான உப குழுக் கூட்டம் அதன் விசேட தூதுவர் ஹைனர் பீல்ட்பெல்ட் தலைமையில் கடந்த வியாழக்கிழமை ஜெனீவாவில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டதுடன் முஸ்லிம்கள் மீதான பேரினவாத வன்முறைகள் எனும் கருப் பொருளில் உரையாற்றினார்.

இதன் போது 1915 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய இனக்கலவர தாக்குதல் சம்பவங்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக ஆட்சியில் சிறுபான்மையினர் மீதான இன வன்முறைகள் குறித்த வரலாற்றுப் பதிவுகளை விபரித்த நிஸாம் காரியப்பர், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முஸ்லிம்கள் மீது பேரினவாத சக்திகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன ஒடுக்கல் வன்முறைகள் தொடர்பிலும் இனவாத, மதவாத இயக்கங்களின் பின்னணி தொடர்பிலும் விபரித்துக் கூறினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொதுபலசேனா இயக்கத்தின் காலி பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தமை தொடக்கம் அளுத்கம சம்பவம் வரை முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளிலும் அவர் தொடர்புபட்டிருந்தார் எனவும் நிஸாம் காரியப்பர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் மியன்மாரில் முஸ்லிம்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்த 696 இயக்கத்தின் தலைவரான விராதுவுடன் பொதுபல சேனாவுக்கு இருந்து வருகின்ற இறுக்கமான உறவு குறித்தும் அவரை இலங்கைக்கு அழைத்து வந்து முஸ்லிம்களுக்கு எதிரான மாநாட்டில் பங்குபற்றச் செய்தமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் நிஸாம் காரியப்பர் எடுத்துக் கூறினார்.

பொதுவாக பொதுபலசேனா உள்ளிட்ட பேரினவாத இயக்கங்களின் முஸ்லிம் விரோத இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மறைமுகமாக அனுசரணை வழங்கி வந்தது என்றும் அதனால் அப்பேரின இயக்கங்களினால் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய வன்முறைகளைக் கூட கட்டுப்படுத்துவதற்கோ சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ அரசாங்கம் முன்வரவில்லை என்றும் குறிப்பிட்டு அவர் தனது கவலையை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### மூளை இருக்கிறதா?

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். ஏனென்றால் சிரசுதான் முக்கியம். அதைவிட முக்கியம் என்னவென்றால் தலைக்குள்ளே இருக்கின்ற மூளை. அதுதான் உடலினுடைய அத்தனை இயக்கங்களுக்கும் முக்கிய காரணமாக, அடிப்படையாக இருக்கின்றது. அதனால்தான் ஏதாவது ஒரு காரியத்தை யாராவது சரியாகச் செய்யவில்லையென்றால் உனக்கு மூளை இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

ஆனால் ஓர் அதிசயமான செய்தி பாருங்கள். மூளைக்கு அப்படிப்பட்ட ஆற்றல் உண்டு என்ற எண்ணமே இல்லாத காலம் ஒன்று இருந்ததாம். அது ஒரு சதைப்பிண்டம். அதனால் ஒரு பயனும் இல்லை. ஏதோ அது தலைக்குள் ஓர் அலங்காரத்துக்காக இருக்கின்றது என்ற எண்ணம் பலகாலமாக இருந்ததாம். இப்போது இதை நினைக்கும்போது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அதுமட்டுமல் மருத்துவத்தில் ரொம்ப முன்னேறியிருந்த சீன அகராதியில் மூளையைக் குறிப்பதற்கான வார்த்தையே கிடையாதாம். அப்போது அவர்கள் அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லையென்று தெரிகின்றது. அதுமட்டுமல்ல மூளையைப்பற்றி முதன்முதலாக சித்தித்தவர்கள் யாரென்றால் கிரேக்க மருத்துவர்கள் தான். Brain என்ற ஆங்கில வார்த்தை Bran என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததுதானாம். Brain அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? தேவையில்லாத சதைப்பிண்டமென்று அர்த்தமாம். அப்படிப்பார்த்தால் கிரேக்கர்கள்கூட மூளையைப் பற்றி தப்பான கருத்துத்தான் வைத்திருக்கின்றார்களென்று தெரிகின்றது.

இவ்வளவு ஆற்றல்மிக்க மூளையைச் சாதாரண சதைப்பிண்டமென்று நினைத்த காலமும் இருந்ததென்பது ஆச்சரியமான விடயம் இல்லையா? அப்படியென்றால் மூளையினுடைய ஆற்றலை உணர்ந்து கொள்கின்ற சக்தி எப்போதிருந்து ஆரம்பித்தது தெரிய வேண்டுமல்லவா?

கேலன் என்ற கிரேக்க அறிஞர் ஒரு கருத்தைச் சொன்னார். நாம் உள்ளே இழுக்கும் மூச்சு, மூளைக்குப் போய் உயிர்ச்சக்தியாக மாறி இதயத்திற்கு வருகிறது என்றார் அவர். இது தவறான கருத்துத்தான். ஆனாலும்கூட மூளைக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது என்பதை பற்றிச் சிந்திக்கின்ற ஒரு செயலாக அது இருந்தது.

கி.பி.6 ஆம் நூற்றாண்டில் இருந்து 8 ஆம் நூற்றாண்டு வரைக்கும் அந்தக் காலகட்டத்தில் மூளையைப்பற்றிய ஆராய்ச்சிகள் கொஞ்சம் அதிகமாகவே இருந்ததாம். மூளையைப் பற்றி எங்களுக்கு இந்த அளவுக்குத் தெளிவு வந்ததுக்குக் காரணம் என்ன தெரியுமா? இது ஓர் அதிசயமான செய்தி. மூளையினுடைய ஆற்றலைத் தெரிந்துகொள்ள காரணமாக இருந்தவர்கள் இரண்டு திருடர்கள்தானாம். அப்போது ஒரு நாட்டில் ஒருமுறை இருந்ததாம். அதாவது மருத்துவர்கள் செத்துப்போனவர்களுடைய உடம்பை அறுத்து ஆராய்ச்சி செய்வது அங்கே தப்பு. அது சட்டபூர்வமாக அப்போது அங்கே தடைசெய்யப்பட்டிருந்ததாம். அதை மீறினால் தண்டனையும் உண்டு. அதனால் மனிதர்கள் பற்றி முழுமையாக ஆராய்ச்சி செய்ய முடியாமல் அந்த டாக்டர்கள் சிரமப்பட்டார்கள்.

எடின்பரோ நகரில் பர்க், ஹாரே என்ற இரண்டு திருடர்கள் இருந்தார்களாம். அவர்கள் சின்னச் சின்ன திருட்டுக்களாக செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திருட்டுத் தொழில் இலாபகரமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். அப்போதுதான் அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அதாவது மனித உடலை அறுப்பதற்கு இப்போது தடை இருக்கின்றது. டாக்டர்கள் ஆராய்ச்சி செய்ய ரொம்பவும் சிரமப்படுகிறார்கள். நாம் அவர்களுக்கு இரகசியமாக பிணங்களை கொடுக்கிறதற்கான ஏற்பாடு செய்தோம் என்றால் எங்களுக்கு நிறைய பணம் கிடைக்கும் என்று உடல்களை திருட ஆரம்பித்தார்கள்.

அதாவது இப்போது கிட்னி திருடுகின்ற மாதிரித்தான் இது. கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட மனித உடலை அறுத்து இரகசியமாக, திருட்டுத்தனமாக டாக்டர்களுக்கு இவர்கள் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதில் இவர்களுக்கு நிறைய பணமும் கிடைத்தது. அந்தத் திருடர்கள் உடலை ஒப்படைக்கும் போது அவர்கள் எப்படியான நோயால் இறந்தார்கள் என்ற சில விபரங்களையும் டாக்டர்களிடம் சொல்வார்கள்.

அதேமாதிரி இடது கையில முடக்குவாதம் வந்த ஒருத்தருடைய உடம்பில் அவருடைய தலையை உடைத்து பார்க்கும் போது மூளையினுடைய வலதுபாகம் பாதிக்கப்பட்டிருந்ததை பார்த்தார்கள். அதற்குப் பின்னர் தான் ஆச்சரியமான ஒரு உண்மை தெரிந்ததாம் மனித உடலை இயக்குகின்ற சக்தி மூளைக்கு உண்டென்று. அதற்குப் பின்பு தான் வேகவேகமாக மூளையைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கியதாம்.

இன்றைக்கு மூளை இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்ற முழுமையான சிந்தனைக்கு நாங்கள் வந்திருக்கிறோம் அல்லவா? இப்போதும் மருத்துவக் கல்லூரியில் நடந்ததாக ஒரு வேடிக்கை சம்பவம் சொல்வார்கள். ஓர் ஆண் பாக்டர் ஒரு உடலை அறுத்து வைத்து விட்டு , கூட இருந்த பையனிடம் கேட்பாராம் இது என்ன உறுப்பென்று. உண்மையில் பார்த்தால் அது ஒரு பெண்ணினுடைய கர்ப்பப்பை. மற்றவர்களும் அதை என்னவென்று யோசித்தார்களாம். அவர்களுக்கு புரிய வேண்டும் என்பதற்காக அவர் ஒரு க்ளு கொடுத்திருக்கிறார். எல்லோரும் அங்கே பையன்களாக இருந்தார்களாம். அதனால் இந்த உறுப்பு நம்ம யாரிடமும் இல்லை என்றாராம். உடனே ஒரு பையன் சொன்னானாம். "நான் அதை என்னவென்று கண்டு பிடித்து விட்டேன்"

"என்னது"

"மூளை!"

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி/மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பாடசாலை முதல்வர் சி.விசுவாசம் தலைமையில் நடைபெற்ற போது....

# விநாயகபுரம் கிராமத்தில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்

(மல்லாவி)

**அரசாங்கத்தின் 200 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியொதுக்கீட்டில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள விநாயகபுரம் கிராமத்தில் நவீன முறையிலான ஏற்று நீர்ப் பாசனத் திட்டத்தின் அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், மிகவிரைவில் விவசாயகளிடம் கையளிக்கப்படவுள்ளதாக வவுனிக்குளநீர்ப் பாசனத் திணைக்களத்தின் தகவல் தெரிவிக்கின்றது.**

இதுதொடர்பில் தெரிய வருவதாவது, வன்னியில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தும்வகையில் அரசாங்கத்தினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கு வவுனிக்குளத்தின் நீரைப்பயன்படுத்தி 180 ஏக்கர் மேட்டு நிலக்காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்று நீர்ப்பாசனத்திற்குரிய அனைத்து வேலைகளும் பூர்த்தி அடைந்துள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக விநாயகபுரம் கிராமத்தில் உள்ள 130 விவசாயக் குடும்பங்கள் பயன் பெறவுள்ளதாக அத்தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)

# சமூக சேவைகள் அமைச்சினால் நோயாளர்களுக்கு பண உதவி

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் வாழ்கின்ற 70 வயதிற்கு மேற்பட்ட 313 முதியவர்களுக்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதும் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுவருகின்ற தலா 2 ஆயிரம் ரூபாஉதவிப் பணத்திற்கான மொத்தத் தொகையான 6 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 20 கிராம சேவையாளர்பிரிவுகளிலும் 70வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கே இத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

70 வயதைக் கடந்த கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் வாழ்ந்து வரும் நிலையில் இந்த உதவித்தொகை ஒருவருக்கு மட் டுமே வழங்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் உயிராபத்துக்களை ஏற்படுத்தும் நோய்களான புற்றுநோய், சிறுநீரக நோய், காசநோய், தலசீமியா நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் சிறுநீரகம் தொடர்பான நோயால் பாதிக்கப்பட்ட 7 பேருக்கு தலா 500 ரூபா வீதம் 3 ஆயிரத்து 500 ரூபாவும் காசநோய், தலசீமியா ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்ட 3 பேருக்கு தலா 500 ரூபா வீதம் ஆயிரத்து 500 ரூபாவும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 19 பேருக்கு மாறுபட்ட உதவித்தொகையாக 9 ஆயிரத்து 650 ரூபாவும் மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம நிர்வாகிகளும் கிளி. திருநெறிக்கழக நிர்வாகிகளும் ஒன்றிணைந்து கிளிநொச்சி திருநெறிக்கழக வளாகத்தில் நேற்றைய தினம் சிரமதானப் பணியில் ஈடுபட்டதை படத்தில் காணலாம். (படம்:- கிளிநொச்சி 1 செய்தியாளர்)

# கல்வி இராஜாங்க அமைச்சர் வவுனியாவுக்கு வருவார்

கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன், எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக, ஐக்கிய தேசியக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் இந்திரன் சஜீந்திரா தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இவர், வவுனியா மாவட்ட பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை திறந்து வைக்கவுள்ளதுடன், வவுனியா மாவட்ட கல்வி நிலை தொடர்பிலும் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் அபிவிருத்தி குழுக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளதுடன், வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டையும் வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் விளையாட்டு போட்டிகள்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான-2015 இற்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 18, 19 ஆகிய திகதிகளில் முரசுமோட்டை முரசொலி விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டு மைதானத்தில் எல்லே போட்டி நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை கல்மடுநகர் சென்.அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான எல்லே, கபடி, கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடைபெறும்.

எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டு மைதானத்தில் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறும். (அ-2)




## ஓய்வு பெறுகின்றார்

(மல்லாவி)

வவுனியாவடக்கு கல்வித்திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங்கள் கடமையாற்றிய திருமதி ப.கணேசலிங்கம் கடந்த 9ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் ஆசிரியர் சேவையில் 33 வருடங்கள் பல்வேறுபட்ட பதவி நிலை களில் இருந்து பணியாற்றியுள்ளார். மக்கள் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரட்டைவாய்க்கால் - மாத்தளன் வரையான வீதி புனரமைக்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவின் இரட்டை வாய்க்காலிலிருந்து மாத்தளன் வரையான 13 கிலோமீற்றர் வீதியை திருத்துவதற்கான நிதி, பல்வேறு தரப்பினரிடம் கோரியுள்ளதாகவும் நிதி கிடைத்தவுடன் வீதி புனரமைப்புச் செய்யப்படும் என வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதம பொறியியலாளர் வல்லிபுரம் ஜெயானந்தன் தெரிவித்துள்ளார்.

மேற்படி வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை, மாத்தளன் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்துகள் தற்போது நடைபெறுவதில்லையென மேற்படி கிராமங்களில் வசிக்கின்ற சுமார் 460 குடும்பங்கள் தெரிவித்தன.

தனியார் பேருந்துகள், உடையார்கட்டிலிருந்து புதுக்குடியிருப்பு வழியாக மாத்தளன் சந்தியூடாக வவுனியா செல்கின்றன.

ஆனால், முல்லைத்தீவு நகரத்திலிருந்து இரட்டைவாய்க்கால் வழியாக மாத்தளன் வரை எவ்வித போக்குவரத்துகளும் நடைபெறுவதில்லை. இதற்கு காரணம் இந்த வீதி புனரமைக்கப்படாமையாகும்.

வன்னியில் இறுதிப்போர் நடைபெற்ற காலத்தில் அதிகளவான மக்கள் பயன்படுத்திய வீதிகளில் ஒன்றாக இந்த வீதி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது. - ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தலைமைகளால் தமிழ் மக்களுக்குக் கவலை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பில் சந்தித்துப் பேசினார். கூட்டமைப்புக்கு அறிவுரை கூறுவதாக அந்த சந்திப்பு நடந்தது.

பிரதமர் மோடியின் அறிவுரை, தமிழ் அரசியல் தலைமைகள் குறித்த இந்தியாவின் கணிப்பீடு அல்லது மதிப்பீடு ஆரோக்கியமானதாக இல்லை என்பது தெரியவருகிறது.

அதாவது, தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களைத் தவறான பாதையில் வழிப்படுத்துகின்றன. எதற்கு எடுத்தாலும் அவசரத் தன்மை; உடன்பட்டு செல்கின்ற மனநிலை அறவே இல்லாமை என்ற முடிவுகளையே பிரதமர் மோடியின் அறிவுரை சுட்டிக்காட்டி நிற்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரதமர் மோடி கூறிய அறிவுரைகளை வைத்துப் பார்க்கும் போது இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மிகத் தெளிவாகப் பிரச்சினைகளை அறிந்துள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகளை மிகத் துல்லியமாகப் படம் பிடித்துள்ளது என்பது தெளிவாகிறது.

எனவே, மோடியின் அறிவுரை என்பதில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் உண்மையை அறிந்திருக்க வேண்டும்.

அதாவது, தமிழ் அரசியல் தலைமைகள் புத்திசாலித்தனமாக-இராஜதந்திரத்தோடு செயற்படுவதில்லை என்ற கருத்தை உலக நாடுகள் கொண்டுள்ளன. இதன் பிரதிபலிப்பாக பிரதமர் மோடியின் அறிவுரையைக் கருதிக் கொள்ள முடியும்.

பாதிக்கப்பட்ட; உரிமை கிடைக்கவேண்டிய; உயிரிழப்புகளைச் சந்தித்த ஓர் இனம் மீது உலகம் இரக்கமும் அனுதாபமும் கொள்வதே வழமை. ஆனால், ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை உலக நாடுகளின் நிலைமை அதுவன்று.

மாறாக, நீங்கள் முதலில் நிதானமாக இருங்கள் என்பதே உலக நாடுகளின் போதனையாக உள்ளது. இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை அறிக்கையை ஐ.நா பிற்போட்டமை தொடர்பில் நடந்த ஆர்ப்பாட்டங்கள், மைத்திரியின் அரசுக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானங்கள் என்பன தமிழர்கள் குறித்து தப்பான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

அதேநேரம் வடக்கு மாகாண சபையில் ஆட்சித் தரப்பில் இருப்பவர்களே ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டுக் கொள்வது, செங்கோலை உடைப்பது போன்ற ஆவேசத்தனங்கள் தமிழ் மக்களுக்கு ஆட்சி செய்யத் தெரியாது என்றொரு கணிப்பையும் சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தும்.

இத்தகையதொரு கணிப்பின் முடிவு எங்களை தவறாகக் கருத வைக்கும் என்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; அதன் உறுப்பினர்கள் நிதானமாக நடந்து கொள்வது அவசியம்.

மிக மோசமான இனப்போரில் எல்லாவற்றையையும் இழந்து - பறிகொடுத்து ஏதிலிகளாக இருக்கும் தமிழர்களின் எதிர்காலம் என்பதை தகுதியான அரசியல் தலைமையால் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

ஆக, மோடியின் சந்திப்புக்குப் பின்பாயினும் ஒரு பலமான அரசியல் தளத்தை கூட்டமைப்பு அமைத்துக் கொள்வது அவசியம். இல்லையேல் தமிழ் அரசியல் தலைமை குறித்த தமிழ் மக்களின் கவலை கடுமைப்படுவது தவிர்க்க முடியாது.

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 30 வீத சம்பள உயர்வு!

## அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவிப்பு

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் அனைவருக்கும் 30 வீத சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும், தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மரணம் அடைந்த பனைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் உதவுதொகையாக வழங்கப்படும் எனவும் வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியின் போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிடும் போது, கூட்டுறவுப் பணியாளர்கள் மிக நீண்டகாலமாகத் தங்கள் சம்பள உயர்வு தொடர்பாக முறையிட்டு வருகிறார்கள். இந்த விடயம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு சம்பள உயர்வு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி, வட மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இந்த வருடம் தை மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 30 வீத சம்பள உயர்ச்சியை வழங்க வேண்டும்.

இச்சம்பள உயர்வை வழங்குவதற்கான கணிப்பீட்டு விபரங்கள் அடங்கிய சுற்றுநிருபம் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுவுக்கு மிக விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், பனைத் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலாளர்களைப் போன்றே தொழிலின் போது ஆபத்துகளை எதிர்கொள்பவர்களாக உள்ளனர். ஒவ்வொரு வருடமும் பனையில் இருந்து தவறி விழுந்து பலர் மரணிக்கின்றார்கள்.

பனைத் தொழிலாளர்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்கள். இதைக் கருத்திற் கொண்டு பனையில் இருந்து தவறி வீழ்ந்து மரணமடைந்த பனைத் தொழிலாளிகளின் குடும்பங்களுக்கு எனது அமைச்சு நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் உதவு தொகையாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபை உருவாக்கப்பட்ட 2013-ம் ஆண்டை ஒரு கால எல்லையாகக் கொண்டு, 2013-ம் ஆண்டிலிருந்து இற்றைவரை தொழிலின் போது மரணமடைந்த பனைத் தொழிலாளிகளின் குடும்பங்கள் இந்த உதவு தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவர்கள், தங்கள் மாவட்டத்துக்குரிய பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு ஊடாக அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ந.கணேசனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, வே.சிவயோகம், அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த முன்னாள் தலைவர் க.நடராசா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (செ)

## வாகன விபத்து இருவருக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் -மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

சம்பவத்தில் இராமகிருஷ்ண குருக்கள் கனகநாதன் (வயது 23), இராசன் சுதாகரன் (வயது 32) ஆகிய இருவருமே விபத்தில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-3,60)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் இடம் பெற்றது.

இதில் சங்கத்தின் புதிய தலைவராக தியாகராசா இராசரத்தினம், செயலாளராக சீனியர் குணரத்தினம், பொருளாளராக யோசப் தாவீது, உப தலைவராக சரவணபாலசிங்கம், உப செயலாளர் சீனியர் பாஸ்கரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 7 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவாகினர். (இ-3)

## கடையை உடைத்து பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று முன்தினமிரவு கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள குமாரி ஸ்ரோஸ் என்ற கடையிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதில் 25 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 11 சிகரட் பக் கெட் கட்டுகள் களவுயோயிருப்பதாக இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இத் திருட்டு சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-3,60)

## சவுதியில் இருந்து தங்கம் கடத்தி வந்த இருவர் கைது

சவுதி அரேபியாவின் ஜெடா நகரில் இருந்து இலங்கைக்கு வந்த இரண்டு வர்த்தகர்கள் 20 தங்க பிஸ்கட்டுகளை கடத்தி வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையை சேர்ந்த இந்த வர்த்தகர்களை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று மதியம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பாறை மற்றும் காத்தான்குடி பிரதேசங்களை வசிப்பிடமாக கொண்டவர்கள் எனவும் இவர்கள் சவுதி அரேபியாவுக்கு வாரத்தில் 4 முறை பயணிப்பவர்கள் எனவும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றிய தங்கத்தின் எடை ஒரு கிலோ கிராமாகும். அவற்றின் பெறுமதி ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் பேரிச்சம்பழத்திற்குள் தங்க பிஸ்கட்டுக்களை மறைத்து கடத்தியுள்ளனர்.

இவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதுடன் அந்நாட்டு விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் இலங்கை திரும்பியுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை நடத்திய பின்னர் சந்தேக நபர்களையும் தங்கத்தையும் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தெய்வீகப் புதையல்



ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருவாக உருவாகும் காலத்திலேயே அது தன்னுடைய பெற்றோர்களது பதிவுகளைப் பெற்றுக் கொள்கிறது. அதைப் போலவே, ஒவ்வொரு தாவரத்தினுடைய விதையிலும் அந்தத் தாவரத்தின் எல்லாத் தன்மைகளும் குணங்களும் பதிவாகி அந்த விதையானது செடியாக வளரும்போது அந்தக் குணங்கள் ஒவ்வொன்றாகப் பிரதிபலிக்கின்றன.

ஆகையால்தான், நான் கருமையத்தை மனித இனத்துக்குக் கிடைத்த தெய்வீகப் புதையல் என்று சொல்கிறேன். அந்தக் கருமையம்தான் பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றலினுடைய நீதிமன்றம் என்றும் சொல்லலாம். அதுமட்டுமல்லாமல், அதே கருமையம்தான் ஒருவரது தற்போதைய வாழ்க்கையில் ஏற்படும் உணர்வுகளுக்கெல்லாம் உற்பத்திக்கூடமாகவும் கருத்தொடராக வந்த பதிவுகளுக்கெல்லாம் களஞ்சியமாகவும் விளங்குகிறது.

ஒவ்வொருவரும் கருமையத்தின் பெருமையைத் தெரிந்து கொள்வதோடு, அதை மதிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தக் கருமையம்தான் 'ஆன்மா' எனப்படுகின்றது. கருமையத்தின் தன்மைகள்தான்ஒரு சீவனின் முற்பிறவிகள் பலவற்றுக்கும் பின்பிறவிகள் பலவற்றுக்கும் கருத்தொடர் விளைவாகத் தொடர்புற்றிருக்கின்றது.

வாழ்க்கையை வாழ்வதற்கும் இன்பம், அமைதி, பேரின்பம் ஆகியவற்றை அனுபவிப்பதற்கும் அறிவியல் முழுமை பெறுவதற்கும் கருமையத்தை எப்போதும் வளமாகவும் தாய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபை வீழ்த்தியது கரீபியன்




ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்தின் நேப்பியர் நகரில் நேற்று நடந்த உலகக்கிண்ண "பி" பிரிவு லீக் போட்டியில், மேற்கிந்திய தீவுகள், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகளின் அணித்தலைவர் ஹோல்டர், முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு நாசிர் அஜிஸ் (60), அம்ஜத் ஜாவேத் (56) அரைசதம் கடந்து கைகொடுத்தனர்.

மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சை சமாளிக்க முடியாத ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 47.4 ஓவரில்175 ஓட்டங்களுக்கு சுருண்டது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் சார்பில் ஹோல்டர் 4 விக்கெட்டுகளையும், ஜெரோம் டெய்லர் 3 விக்கெட்டுகளையும், ரசல் 2 விக்கெட்டுகளையும், சாமுவேல்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து சுலப இலக்கை விரட்டிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு தொடக்க வீரர்களான டுவைன் ஸ்மித் (15), சாமுவேல் (9) ஏமாற்றினர்.

அபாரமாக ஆடிய ஜான்சன் சார்லஸ் (55) அரைசதம் அடித்தார். ரசல் (7) சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய ஜோனாதன் கார்டர் அரைசதமடித்தார்.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 30.3 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 176 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஜோனாதன் கார்டர் (50), ராம்தின் (33) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் மஞ்சுளா குருகே, அம்ஜத் ஜாவேத் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

மேற்கிந்திய தீவுகளின் ஹோல்டர் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)




## நெடியகாடு இளைஞர் வி.க உதைபந்தாட்ட தொடர்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்று தொடரில் 13 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 6:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது. கலைமதி அணி சார்பாக விஜேந்திரன் 2 கோல்களையும் சிந்துஜன், சந்துரு,பானுப்பிரியன் தலா ஒவ்வொரு கோலினையும் பெற்றுக்கொண்டனர்.

நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் உடுப்பட்டி யூத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய உடற்கல்வி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது.

உடற்கல்வி அணி சார்பாக சந்துரு ஒரு கோலினை பெற்றுக் கொண்டார். (க)

## மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர் மாபெரும் துடுப்பாட்ட போட்டியின் ஒருநாள் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 45 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மத்திய கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடினர். இவ்வணி 43.4 ஓவர்களில் சகல இலக்குகளினையும் இழந்து 160 ஓட்டங்களினை பெற்றுக்கொண்டுள்ளது.

மத்திய கல்லூரி சார்பாக துடுப்பாட்டத்தில் திரேசன் 41 பந்துகளிற்கு முகம் கொடுத்து 4 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டத்தினையும் கோமேதகன் 40 பந்துகளிற்கு முகம் கொடுத்து 4 பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களினையும் ஜெறேசன் 24 பந்துகளிற்கு முகம் கொடுத்து ஒரு பவுண்டரி அடங்கலாக 10 ஓட்டங்களினையும் கௌதமன் 37 பந்துகளிற்கு முகம் கொடுத்து 3 பவுண்டரகள் அடங்கலாக 26 ஓட்டங்களினையும் பெற்றுக்கொண்டனர்.

சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் கபில்ராஜ் 8 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்க ளினை கொடுத்து 2 விக்கெட்டுக்க ளினையும் யதுசன் 9 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டத்தினை கொடுத்து 2விக்கெட்டுக்களினையும் லோக தீஸ்வர் 8.4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டத்தினை கொடுத்து 3விக்கெட் டுக்களினையும் கிசந்துஜன் 6 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டத்தினை கொடுத்து 2 விக்கெட்டுக்களினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 31.5 ஓவர்களில் 115 ஓட்டங்களிற்கு சகல இலக்குகளினையும் இழந்து 45 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

கல்லூரி சார்பாக கபில்ராஜ் 30 பந்துகளிற்கு முகம் கொடுத்து 1 பவுண்டரி அடங்கலாக 14ஓட்டத்தினையும் கானாமிர்தன் 35 பந்துகளிற்கு முகம் கொடுத்து பவுண்டரி அடங்கலாக 16 ஓட்டத்தினையும் கெறோட் லக்ஜ்சி 29 பந்துகளிற்கு முகம் கொடுத்து 2 பவுண்டரகள் அடங்கலாக 20 ஓட்டத்தினையும் கஜீபன் 24 பந்துகளிற்கு முகம் கொடுத்து 1 பவுண்டரி அடங்கலாக 14 ஓட்டத்தினையும் பெற்றுக்கொடுத்தனர்.

மத்தியகல்லூரி சார்பாக பந்து வீச்சில் தீபன்ராஜ் 9.5 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டத்தினை கொடுத்து 6 விக்கெட்டுக்களினையும் கௌதமன் 8 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டத்தினை கொடுத்து 2 விக்கெட்டுக்களினையும் மதுசன் 3 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டத்தினை கொடுத்து ஒருவிக்கெட்டினையும் பெற்றுக்கொடுத்தனர்.போட்டியின் ஆட்ட நாயகனாக மத்திய கல்லூரியின் தீபன் ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க-23)

## இந்திய அணிக்கு சானியா கப்டன்




SPORTS
விளையாட்டுச் செய்திகள்

பெட் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆசிய-ஓசியானா (குரூப்-2) சுற்று போட்டி ஐதராபாத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல் ) 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் இந்திய பெண்கள் டென்னிஸ் அணிக்கு முன்னணி வீராங்கனை சானியா [illegible] நியமிக்கப்பட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகக்கிண்ணம் 2015

# துடுப்பாட்டத்தில் சங்கா முதலிடம் டில்சானுக்கு 4ஆவது இடம்

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் கடந்த மாதம் 14ம் திகதி தொடங்கிய உலகக்கிண்ண லீக் சுற்று போட்டிகள் நேற்றுடன் முடிவடைந்தது.

இதில் இலங்கையின் விக்கெட் காப்பாளர் சங்கக்கார, அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். இவர் 6 போட்டிகளில் விளையாடி 496 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 4 சதங்கள் அடங்கும்.

இவருக்கு அடுத்தபடியாக சிம்பாப்வே வீரர் பிரெண்டன் ரெய்லர் 433 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் இரண்டு சதம் மற்றும் ஒருஅரை சதம் அடங்கும். 3வது இடத்தில் டி வில்லியர்ஸ் ஒரு சதம், இரண்டு அரை சதத்துடன் 417 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இலங்கை வீரர் டில்சான் 395 ஓட்டங்களுடன் 4வது இடத் திலும், பங்களாதேஷ் வீரர் மக்முதுல்லா 344 ஓட்டங்களுடன் 5வது இடத்திலும் உள்ளனர்.



சிம்பாப்வே வீரர் வில்லியம்ஸ் 339 ஓட்டங்களுடன் 6வது இடத்திலும், இந்திய வீரர் தவான் 337 ஓட்டங்களுடன் 7வது இடத்திலும், பாகிஸ்தான் வீரர் மிஸ்பா உல் ஹக் 316 ஓட்டங்களுடன் 8வது இடத்திலும் இருக்கின்றனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வீரர் அன்வர் (311 ஓட்டங்கள்), தென்னாபிரிக்க வீரர் அம்லா (307 ஓட்டங்கள் ) முறையே 9 மற்றும் 10வது இடத்தில் உள்ளனர்.

# எமக்கிடையேயான ஒற்றுமையே வருங்காலத்தை ஒளிர்வுபடுத்தும்

## தும்பளை திறப்பு விழாவில் முதல்வர்

எங்களை பொறுத்தவரையிலே அதாவது வடமாகாணத்தை பொறுத்தவரையில் நாங்கள் மற்றவர்களை எதிர்பார்த்து கொண்டிருக்க முடியாது. நாங்களே எங்களோடு ஒரே உறவாக ஒற்று மைப்பட்டு வருங்காலத்தை நாங்களே தீர்மானிக்க கூடிய விதத்தில் முன்னெடுத்து செல்லக்கூடியவாறு ஒற்றுமைப்பட்டு கடமையாற்ற வேண்டும். எங்களுக்கு கிடைக்கும் வசதிகள் மிகக் குறைவாக இருந்தாலும் எங்களிடையே இருக்கும் ஒற்றுமைதான் எங்களுடைய வருங்காலத்தை நல்ல ஒளிமயமான காலமாக மாற்றித்தர இருக்கின்றது என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன் கொடையின் கீழ் கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட தும்பளை தெற்கில் 18 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பற்றிக் உற்பத்தி நிலையத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் திறந்து வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

வட மாகாணம் என்பது யார் எதைத் தந்தால் என்ன தராவிட்டால் என்ன நாங்களாகவே எங்களை வளப்படுத்தி முன்னேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடியவர்கள் என்பதை எடுத்துக் காட்ட கூடியவர்களாக இருக்க வேண்டும்.

போர்க் காலங்களில் இரவில் தண்ணீரை விட்டு அதற்கு மேல் எண்ணெயைவிட்டு சிறு குப்பி விளக்கில் படித்து பாடங்களில் சித்தி பெற்றார்களே அதைப் போன்று கிடைக்கும் வளங்கள் எவ்வளவுதான் குறைவாக இருந்தாலும் அந்த வளங்களை நல்ல வளங்களாக மாற்றி வருங்காலத்தை ஒளிமயமான வருங்காலமாக மாற்றக்கூடிய நிலையிலே நாங்கள் இருக்கவேண்டும் அதைத்தான் நீங்கள் எங்களுக்கு எடுத்து காட்டுகின்றீர்கள்.

உங்களை பார்த்து மற்றவர்களும் கூட்டுறவு அடிப்படையிலோ, கிராம அபிவிருத்தி அடிப்படையிலோ சேர்ந்து முன்னேற இறைவன் துணைபுரிய வேண்டும் என கூறினார். (செ-60)

# பொதுத்...

விற்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படாவிட்டால், தமது கட்சியின் கீழ் மகிந்தவை போட்டியிடச் செய்யப் போவதாக லியனகே தெரிவித்துள்ளார்.

விரைவில் இது குறித்து பகிரங்கமாக அறிவிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னணி வர்த்தகரான லியனகே கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போதிலும், ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவாகவே தேர்தல் காலத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# 'நோ பயர்...

அரசாங்கம் நிராகரிப்பதாக, வெளி[illegible]த்துறை பிரதியமைச்சர் [illegible] பெரேரா தெரிவித்துள்ளார்.

சனல் 4 வீடியோ காட்சிகளால் இலங்கைக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இதனையடுத்தே அதனை சிங்கள மொழிப் பெயர்ப்பில் வெளியிட்டுள்ளார்கள்.

எனினும் இதன் காரணமாக நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாது என்று பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரித்தானிய நாடாளு ம[illegible]த்தில் இந்த வீடியோ காண்பிக்கப்பட்ட போதும் உரிய பொறுப்புக் கூறல இருக்கவில்லை என்று அவர தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரித்தானியா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம், நோ பயர் சோனின் சிங்கள மொழிப் பதிப்பை, இல[illegible]யில் வெளியிட அனு ம[illegible] மெக்ரே அனுமதி கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# ஐ.நா. அறிக்கை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் இறுதி அறிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்படவிருந்தது.

எனினும் அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ)

# தமிழர்களுக்கு...

அவர் தொடர்ந்து கூறுகையில், வடக்கு யுத்தத்தில் தமிழ் மக்கள் பெருமளவு துயரத்துக்குள்ளானார்கள். சிங்கள மக்களின் விகிதாசார அடிப்படையில் தமிழ் மக்களின் இழப்பு அதிகம்.

தமிழ் சமுதாயம் கடந்த தசாப்தத்தில் சிங்களவர்களுக்கு எதிராக போர் புரிவதாகவே நினைத்தது. சி[illegible]ள, தமிழ் சமுதாயங்கள் மிகத் தெளிவாகப் பார்க்கவில்லை. சிங்கள, தமிழ் அரசியல்வாதிகளின பிழையான அரசியல் கொள்கையே இந்த சமூகக் கிளர்ச்சிக்கு அடிப்படையானது.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் ஆகும். சிங்களவர்களின் எதிரி தமிழர்களோ தமிழர்களின் எதிரி சிங்களவர்களோ இல்லை.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்த யுத்தம் இந்தளவுக்கு வீரியமடைவதற்கு காரணம் வெளிநாட்டவர்களின் தலையீடாகும்.

எமது அரசியல் தலைவர்கள் பிழையான வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்றினர். நாங்கள் அமெரிக்கர்களில் தங்கியிருந்த வேளை, இந்தியா சோவியத் தேசத்தின் பாதையில் சிந்தித்தது.

சோவியத் தேசம் இன்று இல்லாததனால் உலகச் சந்தை தொடர்பில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில்போட்டி நடைபெறுகின்றது.

நாங்கள் பொம்மலாட்டக்காரர்களாக இருப்பதால், விபரீதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விவசாய பொருட்களில் இரசாயன பாவனையால் ரஜரட்ட பிரதேசத்தன் நீர் உவர்நீராக மாற்றமடைந்து, அங்கு சிறுநீரக நோய் பரவியுள்ளது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மரணத்தை எதிர்நோக்கியுளளனர். இவ்வாறான நிலையில், வடமாகாண சபை இரசாயன மற்ற விவசாயக் கொள்கையொன்றை அறிமுகபபடுத்தலாம். யாழ்ப்பாணம், எதிர காலத்தில் கடல்நீருக்குள் மூழ்கும் அபாயம் உள்ளது.

அதிகபடியான காபனீரொட்சைட் வாயு காரணமாக கடல் நீர் மட்டம் அதிகரிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை இது தொடர பில் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கை சூழல் ரீதியாக அழிவடையாத நாடு. அதனை பாதுகாக்க வேண்டும்.

மது, போதைப்பொருள் பாவனை, விபசாரம் என்பன சிங்கள, தமிழ் சமூகத்தில் அதிகரித்துள்ளது. இவற்றிலிருந்து சமுதாயத்தை மீட்டெடுக்கவேண்டும்.

எமது நாடு தற்போது பெரும் கலாசார சீரழிவுகளை எதிர்நோக்கியுள்ளது. கொழும்பிலிருந்து போதைபொருள் பாவனை தற்போது வடக்குக்கும் பரவி வருகின்றது. வடக்கு தெற்கு என்ற பாகுபாடின்றி எமது கலாசாரங்களை பாதுகாக்க குரல் கொடுக்க வேண்டும் என அத்துரலியே ரத்னதேரா் தெரிவித்தார்.(செ)

# அரசியல்...

டுள்ளனர் என்று நீதி அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனவே, இவர்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும்? என்று எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால, புதிய அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்களே ஆகின்றன. இந்நிலையில், நாம் முக்கிய சில நடவடிக்கைகளை முனனெடுத்துள்ளோம். அந்த வகையில், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விவகாரத்தில் வழக்குத் தொடர முடியுமா? அவர்களை விடுதலை செய்வதற்கு ஏதுவான நிலை காணப்படுகின்றதா? என்பது உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கையை விரைந்து சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த அறிக்கை இன்னும் ஓரிரு வாரங்களில் கிடைக்கும்.

அதன்பின்னர் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். குறிப்பாக விடுதலை செய்யப்பட்டால், அவர்கள் சுதந்திரமாக வாழவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அது அடிப்படை உரிமையும் கூட என்றார் ஜனாதிபதி. (செ)

# பிரபல...

சொந்தமான வாகனத்தில் வந்து அப்போது 16 வயதில் இருந்த எமது பிள்ளையை கடத்திச் சென்றார்.

இது குறித்து கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்திலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிலும் முறைப்பாடு செய்தோம். எனினும் பலன் கிடைக்கவில்லை.

பிள்ளையை மீண்டும் ஒப்படைத்து கல்வி நடவடிக்கைகளை தொடர இடமளிப்பதாக கூறினாலும், அவர்கள் அதனை செய்யவில்லை. தொடர்ந்தும் அவர்களின பொறுப்பில் வைத்துள்ளனர்.

மகளை தொடர்பு கொள்ள எந்த வழியும் இல்லை என்பதால், நாங்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றோம்.

பிள்ளையின் பொறுப்புரிமையை கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்துள்ளோம்.

மகளை போலி கடவுச்சீட்டில் வெளிநாட்டு அழைத்துச் செல்ல போவதாக தகவல் கிடைத்துள்ளது. எனினும் மகளின் கடவுச்சீட்டு எங்களிடமே உள்ளது.

எமக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பெண்கள் விவகார அமைச்சர் ரோசி சேனாநாயக்க ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

பெண் பிள்ளை என்பதால், இவ்வளவு நாள் பொறுத்துக் கொண்டிருந்தோம். கடந்த தேர்தல் நேரத்தில் இந்த சம்பவத்தை வெளியில் சொல்லுமாறு உறவினர்கள், நண்பர்கள் கூறினார். நாங்கள் அப்படி செய்யவில்லை.

தற்போது சம்பவத்தை வெளியில் கூறியுள்ளோம். எமக்கு அவமானம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என ரணசிங்க தம்பதியினர் தெரிவித்துள்ளனர். (செ)

# பொறுமையுடன்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வடமாகாணத்திற்கு மேற்கொண்ட விஜயம் குறித்த, இந்திய செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த வடக்கின் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன்,

இதுவரை காலமும் வட இந்தியர்களுக்கு, இலங்கையின் வட பகுதியின் கஷ்டமான நிலைமைகள் குறித்து, பெரிய அளவில் கரிசனை கிடையாது என்ற கருத்துத் தோற்றமே இங்கு நிலவியது. ஆனால் இந்தியப் பிரதமர் இங்கு நேரடியாக வந்து நிலைமைகளை கண்டு, நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் எனும் உறுதியை அளித்திருப்பது, எமக்குப் பெரிய ஆறுதலை அளித்துள்ளது. அவர் வருகைக்கு முன்னர் இருந்ததை விட, மோடி அவர்கள் இங்கு வந்து சென்றதன் பின்னர், இந்தியாவிடம் எங்களின் நம்பிக்கை கூடியுள்ளது என தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள், மீள்குடியேற்றம், நல்லிணக்கம் போன்ற விஷயத்தில் பொறுமை காக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளது பற்றி பதிலளித்த அவர், பொறுமை என்பது அவசியம். ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் முடியவில்லை. அதேவேளை அழுத்தம் கொடுத்தால் மட்டுமே இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினருடைய சில விடயங்களை யாவது செய்யும் என்பதையும் நாங்கள் அறிந்துள்ளோம். கடந்த 67 ஆண்டுகளாக இந்த நாட்டில் சிறுபான்மையினர் பொறுமையாகக் காத்திருந்தனர். எனவே நன்மைகள் ஏற்படுமாக இருந்தால, இன்னும் சில மாதங்கள் காத்திருப்பதில் தவறில்லை என கூறியுள்ளார்.

மேலும் ஈழத் தமிழ் மக்கள் தொடர்பில் உணர்ச்சிகரமாகச் செயற்படுகின்ற தமிழக மக்கள், அவதானத்துடன் செயற்படுவது பயனுள்ளதாக இருக்கும் என்று வடமாகாண முதலமைச்சர், இந்திய செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினை பற்றிய முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்னர், அங்கு என்ன நடக்கின்றது, என்பதைக் கவனத்திற் கொண்டு, ஏதேனும் முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் தங்களுடன் பேசுவது பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சில நேரங்களில், உணர்ச்சிகள் - நாங்கள் விரும்புகின்ற முடிவைப் பெற்றுத் தராது. அதுவே பல சமயம் எதிர்மறையான விளைவையும் ஏற்படுத்தும் என்றும் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.. (செ)

# நிறைவேற்று...

தல் விரைவில் பிரசுரிக்கப்பட உள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வழமையான முறையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அவசர சட்ட மூலமாக இந்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இத்திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது. பாராளுமன்றம் நிறுவப்பட்டு ஓராண்டுக்கு பின்னர் அதனை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது, புதிய திருத்தங்களின் அடிப்படையில் நான்கு ஆண்டுகள் செல்லும் வரையில் பாராளுமன்றை கலைக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுதல் தொடர்பிலும் புதிய சட்டத் திருத்தங்களில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் படைகளின் சேனாதிபதி, அமைச்சரவையின் பொறுப்பாளர், அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஆகியவை அவ்வாறே தொடர்ந்தம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.


தேர்தல் முறைமை மாற்றம் குறித்து இறுதித் தீர்மானம் நாளை செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட உள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய வகையிலும் திருத்தங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ராஸ் சதம் ; பாகிஸ்தான் காலிறுதியில்





இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு எதிராக மோசமான தோல்வியுடன் உலகக் கிண்ணம் 2015 ஐ ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, முதல்சுற்றுடன் போட்டித் தொடரில் இருந்து நடையைக் கட்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும்,

அடுத்த நடைபெற்ற 3 போட்டிகளிலும் தொடர்ச்சியான வெற்றிகளை பெற்று தம்மீதான விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன்,

காலிறுதியை தீர்மானிக்கும் அயர்லாந்துடனான ஆட்டத்தில் பந்துவீச்சாளர்களின் அசத்தலான பந்துவீச்சும், தொடரில் இடைநடுவில் இணைந்து கொண்ட விக்கெட் காப்பாளர் சப்ராஸ் அஹமட்டின் அபாரமான சதத்தின் உதவியுடனும் தனது வெற்றி நடையை தொடர்ந்து தக்க வைத்த பாகிஸ்தான் அணி காலிறுதிக்குள் நுழைந்தது.

11ஆவது உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதன் கடைசி லீக் போட்டி (42) நேற்று அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் ஓவலில் நடைபெற்றது.

முன்னதாக நியூசிலாந்தின் நேப்பியர் நகரில் நடைபெற்ற யூ.ஏ.இ உட னான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றதனால்,

பாகிஸ்தானா? அயர்லாந்தா? இறுதி அணியாக காலிறுதிக்கு நுழைவது என்ற தீர்மானம் மிக்க போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில்,

நாணயச்சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு, அணித் தலைவர் போட்டர்பீல்டின் பொறுப்பான சதம் கைகொடுக்க 50 ஓவர்களில் அயர்லாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் போட்டர்பீல்ட் 107, ஹரி வில்சன் 29 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் வகாப் றியாஸ் 3, ரஹாட் அலி, சொகைல் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

238 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி,

சப்ராஸ் அஹமட் - அஹமட் செஷாட்டின் அசத்தலான ஆரம்பம் கைகொடுக்க 46.1 ஓவர்களின் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (241) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சப்ராஸ் அஹமட் ஆட்டமிழக்காமல் 101, அஹமட் செஷாட் 63 ஓட்டங்களை எடுத்தனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி காலிறுதிக்கு தகுதிபெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் சப்ராஸ் அஹமட் தெரிவானார்.




புதிய சுகாதார கற்கை நெறிகள் ஆரம்பம் 2015/2016

**Certificate in Health care**
தகமை: கா.பொ.த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி
பயிற்சி காலம்: ஒரு வருடம்
பயிற்சி கட்டணம் ரூபா 35,000

**Diploma in Nursing**
தகமை: க.பொ.த (உயர்தரம்) குறைந்தது 2 பாடங்களில் சித்தி
சுகாதார சிகிச்சை நிலையங்களில் குறைந்தது 1 வருட அனுபவம் அல்லது எம்மால் ஒதுக்கப்படும் சிகிச்சை நிலையங்களில் பகுதி நேர வேலை செய்யும் ஆர்வம்.
பயிற்சி காலம்: ஒரு வருடம்
வாரத்தில் 2 நாட்கள் வகுப்புக்களும் மற்றைய நாட்களில் உள்ளக பயிற்சி நடைபெறும்.
தற்போது பணிபுரியும் இடத்திலிருந்து கொண்டே எம்மால் வழங்கப்படும் பாடவிதானத்தை பூர்த்தி செய்ய உரிய வசதி செய்து தரப்படும்.
பயிற்சி கட்டணம் ரூபா 50,000

மாணவர்களுக்கான ஏனைய வசதிகள் :
புலமைப் பரிசில்கள்: கட்டண உதவி நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

மாணவருக்குரிய தங்குமிட மற்றும் உணவு வசதிகள் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கீழ் வரும் முகவரியிலும் எமது இணைய தளத்திலும் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 30. 04 .2015 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**Institute of Medical Sciences,**
Green Memorial Hospital, Manipay
T.P No: 021 225 6335 / 021 320 3970 / 0777 286 164
Email: theimsjaffna@gmail.com
Website: www.theims.net
(C-363)

Digital
விஷேட கட்டண சலுகைகள்

இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-365)

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்
உங்கள் பெறுமதி மிக்க பொதிகளுக்கும் பணத்திற்கும் **100%** உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி)
யாழ்ப்பாணம். 021 222 3536

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
(C-374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.